தென்மொழி

தனித்தமிழ்
திங்களிதழ்

‘சாதிப்’ புழுக்கள் நெளிந்திடும் சாணித் திரளைகள் நாம்!

எங்குப் பிறப்பினும் வாழினும்என்னினம்
ஏற்றமுற் றுய்யவே வேண்டுவேன்!-ஒரு
தங்கச் சிலையினைக் காப்பதுபோல் தமிழ்த்
தாயினைக் காக்கவே தூண்டுவேன்!
வங்கக் கடலினைத் தாண்டினும் மேற்றிசை
வானைக் கடந்துநாம் வாழினும்—புகழ்
மங்கச் செயுங்குலத் தாழ்ச்சியை என்னினம்
மண்ணிற் புதைத்திடக் கேட்குவேன்!

செந்தமிழ்த் தாய்பெற்ற பிள்ளைகள் நாம்;ஒரு
சேரப் பழுத்த பழக்குலை!—இதில்
எத்தப்ப ழத்தை உயர்வென்று சொல்வது?
எதனை இழிவெனக் கொள்வது?
முந்தப் பெறும்பல பேரினங்கள் இந்த
முதுமை நிலத்தினில் வாழ்கையில்—நாம்
கொந்திப் பிடுங்கிடும் தாழ்ச்சி யுயர்ச்சியால்
குலங்குல மாய்மனங் காய்வதோ?

(தொடர்ச்சி: அடுத்த பக்கம்)

சுவடி: 11. ஓலை: 8, 9. விலை 75 காசு.

(முகப்புப் பாடல் தொடர்ச்சி)

வேற்றுப் புலத்திடை வாழவந் தோம்;உயர்
விண்ணை—கடல்களை நீந்திஞேம்!—நிலந்
தூற்றப் பெறுங்குலத் தாழ்ச்சி உயர்ச்சியின்
தொல்லைகள் நீந்தத் தயங்குவோம்!
மாற்றப் பெறும் புதுத் தோற்றங்கள் பார்க்கிறோம்;
மற்றும் பொதுமைகள் காண்கிறோம்!-உயிர்
ஊற்றை-உடலினைத் தாழ்வு சொலும், இழி
வுள்ளச் சிறுமைகள் சேர்க்கிறோம்!

வானென ஓங்கிடும் கட்டிடங் கள்,பல
வாழ்க்கைப் புதுமைகள் செய்கிறோம்!—விண்
மீனெனப் பூத்த உயிர்களி டையே, கீழ்
மேலென வேற்றுமை பெய்கிறோம்!
தானுயர் வென்றிடும் சாதிகளும் ஒன்றிற்
ருழ்ந்த நிலைக்கொன்று தாழ்கையில்—தாழ்[வு]
ஏனெனக் கேட்க நடுங்கிடு வோம்; அறி
வூக்கமி லாதவோர் தன்மையால்!

சேர்க்கின்ற வேற்றுமை பற்பல; நம்மினம்
செய்த கொடுமைகள் பற்பல!—தீமை
வேர்க்கின்ற உள்ளங்கள் பற்பல! கூசிடும்
வெட்டிப் பொறுமைகள் பற்பல!
ஆர்க்கின்ற நூல்களால் என்னபயன்? கோடி
அறங்கள் முழக்கிடும் நூல்களேன்?—நாம்
யார்க்கவை சொல்லத் துடித்திடுவோம்? நம்மை
யாருக்கிங் கே,விலை போக்குவோம்?

'சாதி'ப் புழுக்கள் நெளிந்திடு மோர்மொத்தைச்
சாணித் திரளையாய் வாழ்கையில்—நாம்
ஓதி யுணர்ந்திட்ட மக்களைப் போல்; உல
கோருக் குரைக்கத் துடிக்கிறோம்!
காதுயிர்ப் பற்றசெ விடர்களாய், இரு
கண்களி லாத குருடராய்—நில
வீதி யுலாவரப் பார்த்திடு வோம்! என்ன
வேட்கையில் இங்ஙனம் செய்குவோம்?

முன்னம் பிறந்தவர் என்பதனுல் உயர்
மூதுரை சொல்லத் துடிக்கிறோம்—எனில்
சின்னஞ் சிறியராய் வாழ்ந்திடு வோம்; மனச்
சிறுமையி னுல்புழு வாகிறோம்!
[illegible] நினைக்க மறுத்திடு வோம்; உல
[illegible]ம படிபல பேசுவோம்!—நறுங்
[illegible]மொழித்தமிழ்த் தாயினமே, சாதிக்
கார்[illegible]றில் கரைந்துயிர் சாய்வதோ?

தென்மொழி

இலக்கிய இதழ்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி: 11. ஓலை: ௮,9.

[நிறுவனம் தி. பி: 1990 (1959)]

மேழம்-விடை: தி. பி. ௨00௫ (மே-சூன்-1974)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.

அயலகத் தமிழரின் பொருட்டு ஓர் அழுகை!

தமிழர்கள் இவ்வுலகில் எங்குப் போய் வாழ்ந்தாலும் ஒரே உணர்வினராக -ஒரே வகைப் பண்பினராக வாழ்கின்றனர் என்பது ஒரளவில் மகிழ்ச்சி தருவதானாலும், பிறிதோரளவில் மிகவும் வருத்தம் தருவதாகவும் இருக்கின்றது என்பதை என் சிங்கை மலேசியச் சுற்றுச் செலவின் பொழுது உணரவேண்டி யிருந்தது. தாய் நிலந் துறந்து வேற்றுப் புலங்களில் வயிற்றுக்காகவும் வாழ்க்கைக்காகவும் குடி பெயர்ந்து மலைகள் தாண்டியும் கடல்கள் தாண்டியும் சென்று வாழும் தமிழர்கள், பெரும்பாலும் கடந்த இரண்டு மூன்றாயிரம் ஆண்டுகளாகத் தமிழகத்தில் என்னென்ன வகையான உணர்ச்சிகளுடன் வாழ்ந்தார்களோ அவ்வவ் வகையான உணர்ச்சிகளுடனேயே அங்கும்

போய் வாழ்ந்து வருகின்றனர். தங்கள் மொழிப்பற்றும் இனப்பற்றும் அவர்களின் நல்லுணர்வுகளாக இன்றும் ஆங்காங்கே பளிச்சிட்டு விளிர்கின்றன என்றாலும், தமிழகத்தில் உள்ள மூடநம்பிக்கைகளும் அவர்கள் வாழ்க்கையில் பின்னிப் பிணைந்து கொண்டிருப்பதைப் பல விடங்களில் பலர்வயின் கண்டேன்; கண்டு மிகவும் வருந்தினேன்.

சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் உள்ள தமிழர்கள் பலர் பல தலை முறைகளைக் கண்டவர்களாக விளங்குகின்றனர். அவர்களுள் பெரும்பாலார் தங்கள் உடைகளிலும் உணவு முறைகளிலும் ஆங்காங்கு உள்ள பழக்கவழக்கங்களையே பின்பற்றி வருகின்றனர் என்றாலும், சிறுபான்மையினர் இன்றும் வேட்டி சட்டை உடுப்பவர்களாக இருப்பதையும் கண்டு மகிழ்ந்தேன். மேலும் தோட்டப் புறங்களில் வாழ்ந்து வருகின்ற தொழிலாளர்கள் குடியிருப்புகளில் புகுங்கால் தமிழகத்திற்குள் நுழைவது போன்ற ஓர் உணர்ச்சியே உண்டானது. சில இடங்களில் அரசமரத்தடி கோவில்களும் நம் பெண்களின் அரட்டை அளப்புகளும் எனக்குத் தமிழகச் சிற்றூர்ப் புறங்களையே நினைவூட்டின. ஆனால் இவ்வகை உணர்வுகளில் எல்லாம் என் உள்ளத்தில் தீப்போல் காந்தியவை, அவர்கள் தங்களுக்குள் இன்னும் விடாப்பிடியாகக் கொண்டிருக்கும் குல,சமய வேறுபாடுகளேயாகும்.

சிங்கை மலேசியத் தமிழர்களுள் ஒரு கணிசமான பகுதியினர் இலங்கைத் தமிழர்களாவர். அவர்களும் தாய்த் தமிழகத்தினின்று குடியேறிய பலரும் பெரும்பாலும் சிவனிய(சைவ)க் கொள்கையினராக இருந்தாலும் மாலிய (வைணவ) வழிபாடும் வேறுசில சிறுதெய்வ வழிபாடுகளும் கூட அவர்களிடையே இருந்து வருகின்றன. தமிழகத்துப் பிராமணப் பூசாரிகள் சிலர் சில கோயில்களில் இருந்து வழிபாடுகளுக் குதவுவதை நான் பார்த்து வியந்தேன். சிலரிடம் இதைப்பற்றிக் கேட்டபொழுது, அவர்கள் தமிழகத்தினின்று இதன் பொருட்டாகவே தருவிக்கப்பட்டனர் என்று விடை கிடைத்தது. சில கோயில்களில் தமிழக் குருமார்கள் சிலர் பூச்சார்த்திகளாக இருந்து வருவதும் குறிப்பிடத் தகுந்தது. கோயில்களைப் பற்றிய அமைப்புகளிலெல்லாம் தமிழக மணமே வீசுகின்றது. சிலைகளின் அமைப்பும், கோயில் மதில் சுவர்களின் தோற்றமும் வண்ணப் பூச்சுகளும் தமிழகத்தையே அங்கு உருவாக்கிக் காட்டுகின்றன. அவை முற்றும் தமிழகச் சிற்பிகளையே கொண்டு செய்யப்பட்டனவாகத் தெரிகின்றன. சிலவகைச் சமய மூடநம்பிக்கைகளையும் அங்குத் தமிழகத்தைப் போலவே காண நேர்ந்தது. ஆனால் இவற்றில் எல்லாம் கூட என் மனம் மிகவும் வருந்துமாறு ஏதும் நடந்து விடவில்லை.

தமிழ் எவ்வாறு ஆரியக் கலப்பு நீக்கம் பெற்றுத் தூய்மையுற வேண்டி யுள்ளதோ, அதுபோலவே தமிழர்களின் சமயவுணர்ச்சியும் ஆரியக் கலப்பு நீக்கம் பெற்றேயாகல் வேண்டும். அதைத் தொற்றிக் கொண்டுள்ள மூடநம்பிக்கைகள், மனவேறுபாட்டு நோய்கள் முதலியனவும் நீங்கியாகல் வேண்டும். அதுவரை நாம் கொண்டுள்ள சமயக் கோட்பாடுகள் முழுத்தூய்மை பெற்றனவாகவோ பொதுமை சான்றனவாகவோ எல்லா மக்கள் நலத்திலும் ஒரே படித்தான அக்கறை கொண்டுள்ளனவாகவோ கூறிப் பெருமைப் பட்டுக்கொள்ள முடியாது.

இனி, சமய நிலைகள் ஒருபுறம் இவ்வாறிருந்தாலும், தமிழர்கள் தங்கள் தாய்நிலந் துறந்து அயல்நிலங்கள் நோக்கிக் கப்பல் ஏறும் பொழுது விடாப்பிடியாக அவர்கள் தமிழகத்திற் கொண்டிருந்த குலவேறுபாட்டுக் குப்பை கூளங்களையு மன்றோ, அவர்கள் வாழப் புகுந்த அயல் நாடுகளுக்கு வாரிக்கொண்டு சென்றிருக்கின்றார்கள்! இந்த உண்மைதான் என் நெஞ்சாங்குலையில் நெருஞ்சி முள்ளெனக் குத்திக் கொண்டுள்ளது. இவர்களின் அறியாமையை என்னென்பது! பெயர்களின் பின்னர் இன்னும் வாலிட்டு எழுதுவது, இடுகாடு சுடுகாடுகளில் கூடச் சிற்சில இடங்களில் குலப்பிரிவுகளைக் கை யாள்வது, திருமண, இறப்பு நிகழ்ச்சிகளில் குலவேறுபாடுகளைத் தெற்றெனக் காட்டும் பழக்க வழக்கங்களை இன்னும் குரங்குப் பிடியாய்க் கைக் கொண்டிருப்பது போலும் தீய மூடப் பழக்கங்கள் தமிழர்கள் எத்துணையளவு நாட்டியல், குமுகவியல், பொருளியல் முன்னேற்றங்களைப் பெற்றாலும் தங்கள் மனங்களில் உள்ள மனக் கசடுகளை நீக்கிக் கொள்ளவே மாட்டார்கள் என்பதைத் தெளி வாகக் காட்டுகின்றன. தமிழகத்தில் உள்ள தலைவர்கள் சிலர் அவ்வப் பொழுது "பொருளியல் முன்னேற்றம் ஏற்படுமானால் இந்தக் குல முறைகள் மூடநம்பிக்கைகள் எல்லாம் அடியோடு ஒழிந்துபோகும்" என்று கூறக் கேட்டிருக்கின்றேன். பெரும்பாலும் பொதுவுடைமைக் கொள்கையினரும் பேராயக் கட்சிக் கொள்கையினர் சிலரும் இதைக் கூறி வருகின்றனர். இந்தக் கூற்றுக்கு மண்டையடி விழுந்திருக் கின்றது இங்கே! பொருளியலில் மட்டுமன்று—அறிவியலில் முன் னேறினால் கூட, சில சமய வெறிகளும் 'சாதி' வெறிகளும் அறவே ஒழிந்து போகாமற் போனாலும் அடங்கியாகிலும் கிடக்குமா என்னும் ஐயப்பாடு என்னுள் பூதம்போல் வளர்ந்து விட்டது.

தமிழகத்தினின்று ஓராண்டுக்கு முன் இங்குச் சுற்றுலாப் போந்த திரைப்படப் பாட்டாசிரியர் கண்ணதாசன் இங்குப் பேசிய கருத்து களைப பற்றி அன்பர்கள் சிலர் வாயிலாகக் கேட்டுச் செவிகொதித்துப்

போனேன். நிகரியக் கொள்கைகளையும், காந்தியப் பொதுமைக் கருத்துகளையும் பேசிவரும் அத் தமிழகக் குடிமகன், கோயில் கூட்டங்களிலேயே, கள்ளொழுகும் வாயுடன், "முருகன் எங்கள் செட்டிக் குலத்தைச் சேர்ந்த கடவுள். ஐம்பெரும் பாவியங்களுள் இரண்டு பெரும் பாவியங்கள் (சிலப்பதிகாரமும் மணிமேகலையும்) எங்கள் செட்டியினப் பாவியங்கள்" என்று கூறிப் பெருமைப் பட்டுக் கொண்டாராம். அதைக் கேட்டு, இங்கு வாழும் அவ்வினத் தவருள் பெரும்பாலோர் மிகவும் உடல் குளிர்ந்து போனார்களாம். (மேலும் அக் கண்ணதாசர் என்ன கூறினர் என்பதைக் கேட்கையில், அண்மையில் ஏதோ எம். சி. இராமச்சந்திரன் தம் தேர்தல் வீரகாண்மைக்காக, "நான் சொன்னால் தமிழகப் பெண்கள் தங்கள் கணவன்மார் பேச்சைக் கூடக் கேட்காமல் ஒப்போலைகளை எங்கள் கட்சிக்கே போடுவார்கள்" என்று சொன்னதைத் தப்பறைகொட்டி வாய்ப்பறை கிழித்த பச்சைத்தமிழர் பலர் இதைக் கேட்டால் என்ன கூறுவார்களோ என்று மனங்கொதித்து நின்றேன். "நான் இங்குள்ள இத்தனைக் கடவுள்களுள் ஏன் கண்ணனை என் கடவுளாகக் கொண்டிருக்கின்றேன் என்றால் அவன்தான் பெண்கள் பலருடன் கூடிக் களித்திருக்கின்றான்; அவனைப் போல்தான் நானும்!"—என்று கண்ணதாசத் தமிழர் பெண்கள் எல்லாரும் தலைகவிழ்ந்து நாணுமாறு பெரிய பொதுக் கூட்டத்திலேயே பெருமை பேசியிருக்கின்றார்.) (இதற்காகத் தான் போலும் இவர் தமிழகத்தில் கண்ணன் கோயிலைக் கட்ட முனைந்திருப்பதும், அதற்குப் பலரும் ஊக்கமாக நின்று ஆக்கந் தருவதும்...!) இந்நிலைகள் எல்லாம் குலவெறிக்கு எத்துணையளவு இங்கு வலிவூட்டப் பெற்று வருகின்றது என்பதையும், அவ்வெறி இங்கு எத்துணையளவு வேரூன்றியிருக்கின்றது என்பதையும் தெளிவாக உணர்த்தும்.

மேலும் இங்குப் பலவாறான 'சாதி' இயக்கங்கள் இயங்கி வருவதையும், அவை தங்கள் இனவேறுபாடுகளைப் பலவாறு விரிவு படுத்திப் பூசல்கள் இட்டுக் கொள்வதையும் காணுங்கால் தமிழன் நிலாமண்டிலத்திற்கே போய் வாழ நேரிட்டாலும் சாணிச் சட்டியில்-தான் தன் தலையைத் தோய்த்துக் கொள்வான் என்றே உறுதியாக நம்ப வேண்டியிருக்கின்றது. அவன் எத்தனை வகையான உடைகளை உடுத்தால் என்ன? எவ்வளவு உயர்ந்த உணவு வகைகளை உண்டால் என்ன? எத்தனை நாகரிகமுள்ள மக்களிடையில் போய் வாழ்ந்தால்-தான் என்ன? அல்லது எத்தனை உயரமான கட்டிடங்களில் போய் வாழ்ந்தால்தான் என்ன? அவன் உள்ளத்தில் குலவேறுபாட்டு முடை நாற்றமும், மூளையில் உயர்ச்சி தாழ்ச்சி யென்னும் மேடு பள்ளங்களும் அகற்றப் பெற்றுச் சமனிலைப் படாத வரை, தமிழகத்தின்

குப்பை மேடுகளின் மலப்புழுவாய் அவன் நெளிவதும் அமெரிக்க அரசவை விருந்தினனாக அவன் உலாவருவதும் ஒன்றுதான்! அதனால் அவனுக்கோ பிறர்க்கோ என்ன பயன் ஏற்பட்டு விடப் போகின்றது என்பது விளங்கவில்லை.

இனி, என் அயலகச் செலவின் பொழுது நான் அறிந்து கொண்ட தமிழகச் செய்திகளுள் என்னை அதிரச் செய்தது, மதுரையில் நடந்த 'யாதவர்' மாநாட்டுத் தீர்மானந்தான். 'மொழி, மாநில வேறுபாடுகளை யெல்லாம் மறந்து இந்தியாவில் உள்ள யாதவர்களெல்லாரும் ஒன்றுபட வேண்டும்,' என்றும் 'இனிமேல் தென்னகத்தில் உள்ள யாதவர்களும் கோனார், பிள்ளை என்னும் குலப்பட்டங்களை வைத்துக் கொள்வதை விட்டு விட்டு வடநாட்டினர் போல் 'யாதவ்' என்னும் பட்டத்தையே வைத்துக் கொள்ள வேண்டும், என்றும் அம் மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்கள் பெரியார்; அண்ணா, பாரதிதாசன் போன்றவர்களின் பகுத்தறிவுக் கொள்கையின் மேல் விழுந்த சமட்டி அடிகளாகும்! இவ் விருபதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திலும் மேனாட்டார் நிலாக் கோளுக்கும் செவ்வாய்க் கோளுக்கும் வலைவீசிக் கொண்டுள்ள காலத்திலும்—தமிழர்கள் இத்தகைய கீழ்மை நிலைக்கும் கூடப் போகத்தான் போவார்களென்றால் அவர்கள் கற்காலத்திற்கே கூடத் திரும்பிப் போவது நல்லது என நெஞ்சார நினைக்கின்றேன்.

'ஓ! தமிழ இனமே! நீ அடிமையாக வாழ்ந்தாலும் சரி; அரசனாக வாழ்ந்தாலும் சரி; பதியெழுவறியாப் பழங்குடியாக-இருந்த இடத்திலேயே இருந்தாலும் சரி; அல்லது பதிபெயர்ந்து அகன்று பாரெங்கிலும் உள்ள நாடுகள் அனைத்திலும் போய்ப் பதிந்து வாழ்ந்தாலும் சரி; உன்னை நீயேதான் தாழ்த்திக் கொள்ளல் வேண்டும்; உன்னை நீயேதான் வீழ்த்திக் கொள்ளல் வேண்டும்! அத்தனையளவுக்கு ஆரியம் உன்னை அடிமாற்றியுள்ளது; திரிபு படுத்தி உள்ளது. அதன் அடிப்படையாக உள்ள இறுதி அணுவும் உன் உடலினின்று அறக் கழிந்தாலன்றி உன் குடிபெயர்ப்பாலும் பயனில்லை; கொடிச் சிறப்பாலும் உயர்வில்லை; நீ என்றென்றும் ஆரியத் தமிழனே! உன்னை ஈடேற்றுபவர் இனிப் பிறப்பாரா என்பது ஐயமே' என நெஞ்சு புழுங்குவதைத் தவிர வேறு வழியில்லை!



தோன்றிற் புகழொடு தோன்றுக!

—இறைக்குருவன்.

இவ்வுலகில் பிறந்து (வாழ்ந்து) இறந்து போனவர்கள் எத்தனையோ பேர்! அவர்களை எண்ணி அளவிட்டுக் கூற முடியாது. தெய்வப் புலவர் திருவள்ளுவர் இதனை,

துறந்தார் பெருமை துணைகூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று

என்னும் குறட்பாவில் ஓர் உவமையாகக் கூறியுள்ளார். ஆயினும் இறந்தும் இறவாதவர்களாக, காலவெள்ளத்தில் அடித்துச் செல்லப் பெறாது மக்கள் நெஞ்சில் நிலைத்து நிற்பவர்களும் சிலர் உளர்.

உள்ளத்தாற் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்

என்று திருவள்ளுவரே மற்றோரிடத்தில் கூறியுள்ளார். சான்றோர்களைப் பெருமை பற்றி அவ்வாறு சிறப்பித்துச் சொல்லினும், அவர்கள் மட்டுமே உலகத்தார் உள்ளத்துள் இருப்பர் என்று கொள்ள முடியாது. மெய்ப்பொருள் நாயனார் நம் உள்ளத்தில் தோன்றும் பொழுதே அவரை வஞ்சகமாகக் கொன்ற முத்தநாதனும் உடன் தோன்றத்தானே செய்கின்றான்! அவ்வாறே காந்தியடிகளோடு கோட்சேயும், கென்னடியோடு ஆசுவால்டும் நம் நெஞ்சில் தோன்றாமற் போவாரோ? கொடுங்கோலன் சார் மன்னனையோ, இட்லர், முசோலினி பரையோ உலகம் மறக்க முடியுமா?

நாம் உலகினர் நெஞ்சில் தோன்ற வேண்டுமாயின் புகழுடையவர்களாகத் தோன்ற வேண்டும். இயலாவிட்டால் நாம் வாழ்ந்த சுவடே தெரியாமல் மறைந்து விட வேண்டும். அவ்வாறன்றி இகழ்ச்சிக்கு எடுத்துக் காட்டாக, உலகமக்கள் நெஞ்சில் நாம் இடம் பெறவே கூடாது. எனவேதான் திருவள்ளுவர் பெருமான்

“தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று”

என்று விளக்கியுள்ளார்.

மனக்கண்ணில் தோன்றுதலும் தோன்றுதலேயாம்.

“ஈண்டு நின்றோர்க்கும் தோன்றும் சிறுவரை
சென்று நின்றோர்க்கும் தோன்றும் மன்ற

களிறு மென்றிட்ட கவளம் போல
நறவுப் பிழிந்திட்ட கோதுடைச் சிதறல்
வாரசும் பொழுத முன்றில்
தேர்வீ சிருக்கை நெடியோன் குன்றே''

என்னும் கபிலரது புறப்பாடலில் அண்மையில் நின்றூர் புறக் கண்ணுக்குத் தோன்றும் பறம்பு சிறுமலேயே யாயினும் சேய்மையிற் சென்று நின்ருர்க்கும் அகக்கண்ணில் தோன்றும் என்றமை காண்க!

இனி, இக்குறட் பாவுக்கு இவ்வாறு பொருள் கொள்ளாது ''பிறந்தால் பிறக்கும் போதே புகழோடு பிறத்தல் வேண்டும். அவ்வாறு பிறக்க இயலாதவர் பிறப்பதை விடப் பிறவாது விடுதலே நன்றும்'' என்று தமத்துத் தோன்றியவாறே கூறுகின்றனர்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் '

என்றும்,

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்

என்றும் தெளிவுறுத்திய பெருநாவலர் ''பிறக்கும் போதே புகழோடு பிறக்க வேண்டும்; இன்றேல் பிறக்கவே கூடாது.'' என்று கூறுவரோ?

உரையாசிரியர் பரிமேலழகர் ''மக்களாய்ப் பிறக்கின் புகழுக் கேதுவாய குணத்தொடு பிறக்க; அக்குண மில்லாதார் மக்களாய்ப் பிறத்தலின் விலங்காய்ப் பிறத்தல் நன்று.'' என்று உரை வரைந்துள்ளார்.

பிறத்தலும் பிறவாமையும் நம் விருப்பம் முயற்சிகளுக்கும், உணர்ச்சிக்கும் அப்பாற் பட்டன வாதலால் அவற்றைச் செய்தலும் தவிர்த்தலும் இயலாது. அத்தகையவற்றைச் செய்க வென்பதும் தவிர்க்க வென்பதும் அறநூல் முறைமையாகாது, அங்ஙனஞ் சொல்லின் அது பொருண்மொழியுமன்று.

மொழிநூல் மூதறிஞர் பாவாணர் அவர்கள் தமது திருக்குறள் தமிழ் மரபுரையில் இப்பாட்டிலுள்ள 'தோன்றல்', தோன்றுமை என்னும் சொற்களுக்குப் (புகழ்க்கேதுவான குணத்தொடு) பிறத்தல், பிறவாமை' என்றே பொருள் கொள்ளினும் பரிமேலழகர் போலப்

பிறிதொன்றாய்ப் பிறத்தல் நன்று என்று கூறினாரல்லர். மேலும் பாவாணர் அவர்கள்

"பிறத்தலும் பிறவாமையும் இறைவன் ஏற்பாட்டின் படி அல்லது ஊழின் அமைப்புப்படியே நிகழ்வதால், அவை பிறப்பவரின் உணர்ச்சியொடு கூடியனவும் விருப்பத்திற்கு அடங்கியனவுமல்ல. ஆதலால் இங்குத் 'தோன்றுக', 'தோன்றற்க' என்று கூறியதெல்லாம், புகழுக்கேற்ற நல்வினை செய்வானைப் பாராட்டியதும் அது செய்யாதானைப் பழித்ததுமேயன்றி வேறல்ல என அறிக."

என்று விளக்குகின்றமையால் 'தோன்றல்', 'தோன்றாமை' என்பன பிறத்தல் பிறவாமை கருதிக் கையாளப் பெறவில்லை என்பது தேற்றமாம்.

உலகின்கண் புகழுடனோடு நிலைநிற்கும் தலைமக்கள் எல்லாரும் அருந்தொண்டாலும், அறிவு நலத்தாலும், வினைத்திறத்தாலும் இன்ன பிறவற்றாலுமே சிறந்து விளங்கக் காணுகின்றோம். பிறக்கும் போதே புகழோடு பிறந்தவர்களைப் போலிப் பழங்கதைகளில் அல்லாமல் வேறு எங்கும் கண்டோம் இல்லையே!

ஆகையால் "பிறக்கும் போதே புகழோடு (புகழ்க்கேதுவாய குணத்தொடு) பிறக்க வேண்டும்; அவ்வாறு பிறக்க இயலாதவர்கள் பிறவா திருத்தலே நன்றாம்" என்றோ "பிறிதொன்றாய் (விலங்காய்)ப் பிறத்தலே நன்றாம்" என்றோ கூறுவது பொருந்தாமை யறிக! O

'தென்மொழி'

கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்:	9 உருபா	10-50 உருபா	14 உருபா
அரையாண்டுக்கட்டணம்:	5 உருபா	6 உருபா	7-50
தனியிதழ்:	75 காசு	90 காசு	1-10

ஓரிதழுக்கு உரு. 1-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

நாடகம்

வயிர மூக்குத்தி.

மங்கல வாழ்த்து.

செம்பொருளா யாண்டுஞ் செறிந்து விளங்கிடினும்
எம்பொருளா யுற்ற எழின்முதலே—பம்புசீர்
கந்தும் பகுத்தறிவே காணுங் கருமணியே
எந்தமிழே வாழ்க இனிது!

முன்னுரை.

இயக்குநர்:
அன்புள்ளங் கொண்டுள்ள ஐயன்மீர்! ஐயையீர்!
இன்பத் தமிழ்க்கலைகள் கற்றுவல்லீர்! மற்றுள்ளீர்!
அண்டிப் பிழைக்கவந்த ஆரியர்கள் வாய்வெடிக்கும்
நொண்டி மொழிக்கடிமை யாகி அறிவிழந்து
பேதமையால் மற்றுப் பெரிதும் கொடைமடத்தால்
ஓதற்(கு) அரிய குருட்டுக் கடைப்பிடிப்பால்
பண்டுதொட்டு நந்தமிழர் பற்பலவா(று) ஏமாறிக்
கொண்டிருக்கும் கீழ்நிலையைக் கூறின் அடங்காது.
மெய்ப்பிக்க நாடகமாய் மேற்கொண்ட இந்நிகழ்ச்சி
பொய்க்கதை யன்று; பொழுதுபோக்கும் அன்றுகண்டீர்!
ஆட்டி யலைக்கழிக்கும் ஆரியத்தால் நம்முடைய
நாட்டில் நடந்த நடப்பு.

முந்நூ றுண்டு களுக்கு முன்னர்
செந்நெலும் கன்னலும் செழித்துச் சிறந்து
பசுமை வயல்கள் சூழும் தஞ்சையில்
விசுவ நாத [நாயக்க]ன் ஆட்சி
நாற்ப தாண்டுகள் நடந்தது.
சாற்றும் இந்நிகழ்ச்சியும் அந்நா ளையதே!

—இறைக்குருவன்—

காட்சி 1.

இடம்: ஊர்ப்புறச் சாலை. நேரம்: முற்பகல்.
உறுப்பினர்: மருதன், பெரியான், அண்ணாரங்கன், ஆராவமுதன், பறையறிவிப்போன்.

பெரியான்: இப்படி யாமமழை விடாது பெய்வது?
எப்படி வேலைக ளெல்லாம் செய்வது?

மருதன்: நட்ட நடவு முழுவதும் கெட்டது!
பெரியான்: பட்ட பாடு பாழாகி விட்டது!
மருதன்: பள்ளக் காடெலாம் வெள்ளக் காடே!
பெரியான்: முள்ளி மேடுதான் தெரிகிற(து) ஊடே!
மருதன்: வருமோ பெருமழை அடுத்த பாட்டம்?
பெரியான்: வரும்வரும் வாடா பிடிப்போம் ஓட்டம்!
மருதன்: வந்தால் எங்கேனும் ஒண்டலாம் சற்றே,
முந்திய நாள்நான் நனைந்தேன் முற்றே!

பெரியான்: நாட்டிற்[கு] என்ன நலிவுவந் தாலும்
கோட்டையில் கும்மாளம் என்றும் போலும்!
மருதன்: நாட்டு நடப்பைத் தெரிந்துகொள் ளாது
ஓட்டை வாயால் உளறக் கூடாது!
ஓதும் பிராமணர் பட்டியைப் பொறுத்து
மாத மும் மாரி பெய்யுமாம் கருத்து.

பெரியான்: அளவுக்கு மீறி ஓதிய தால்தான்
வளமெலாம் ஒழியப் பொழிகிற தோவான்?

மருதன்: பிள்ளைத் தனமாய்ப் பேசா தேடா!
தெள்ளத் தெளிந்தவ னாநீ? மூடா!

பெரியான்: என்னவா னாலும் படுகிறோம் தொல்லை,
மன்னர் செயலில் மனநிறை வில்லை.

மருதன்: எதுபற்றிச் சொல்கிறாய்?
பெரியான்: என்னடா இப்படிப்
புதுச்செய்தி போலக் கேட்கிறாய் மறுபடி?
அன்றாடம் நம்மூர் அரண்மனை யகத்தில்
பன்னீ ராயிரம் பிராமண ருக்குநல்
அறுசுவை உண்டி அளித்து வருதல்
சிறுவரும் அறிவர்.

(பறை முழக்கம்)

மருதன்: பொறுபொறு! தெருவில்
முரசறை முழக்கம் போல்கேட் கிறதே!

பெரியான்; அரசறி விப்புதான் நாளும் இருக்கிறதே!

பறை- (பறை முழக்கம்)

யறைவோன்: யாவர்க்கும் இதனுல் தெரிவிப்ப[து] இதுதான்:
மாவலம் பொருந்திய மன்னர் பெருமான்
அரண்மனைத் தேவைக்கு விறகு பெருகத்
தாமுடிந் தவரெலாம் தப்பாது தருக!
உரிய விலையை உடனே பெறுக!

(பறை முழக்கம்)

பெரியான்: தெரிகிற தா?நன் ருய்ச்செவி யுறுக!

மருதன்: குந்தித் தின்ருல் குன்றும் மாளுமே!

பெரியான்; தொந்தி முட்ட நாளும் நாளுமே
பிராமணர் உண்டால் கோட்டையென் செய்யும்?

மருதன்: இராப்பகல் இப்படி யாமழை பெய்யும்?

பெரியான், யார்தாம் என்ன செய்யலாம் அண்டி?
கார்கா லத்தில் பிராமணர் உண்டி
நிறுத்தி வைத்தால் நேருமோ குற்றம்?

மருதன்: பொறுக்க முடியுமா தெய்வச் செற்றம்?
"வையக மெல்லாம் தெய்வத் தடக்கம்
தெய்வமோ மந்திரத் தடக்கம் மந்திரம்
பிராமண ருக்குள் அடக்கம் அதனுல்
பிராமண ரேநம் தெய்வம்" என்னும்
அறிஞர் நன்மொழி நீஎங் கறிகுவாய்?
அறிந்திருந் தால்இவ் வாறு பிதற்றுவாய்?

(பிராமணர் இருவர் வருகின்றனர்)

பெரியான்: ஆ! ஆ! தெய்வக் காட்சி என்னே!
நாவாற் பேசிநாம் வாய்மூடு முன்னே!

மருதன்: நிலத்தே வர்கள் வருவதே மாட்சி!
புலப்படும் என்சொல் உனக்கிது சாட்சி.

பெரியான்: கருமையாய் வானம் கனைத்தது பாராய்!

மருதன்: பெருமழை பிடிக்குமுன் போகலாம் வாராய்!

அண்ண- [இருவரும் போகின்றனர்]

ரங்கன்: சுருக்கு சுருக்கென வயிற்றுக் குத்தல்
பெருக்க முற்றதே! எப்படி நடத்தல்?

ஆரா-

வமுதன்: அளவாய் உண்டால் வருமா இங்ஙனம்?

அண்: வளமான உண்டியை விடுவ[து] எங்ஙனம்?

என்ன நீர்தாம் விட்டா வைத்தீர்?
கன்ன லமுதை உறிஞ்சித் தீர்த்தீர்!

ஆரா: விடும் விடும் அதனை! விறகில்லை யாமே?
அண் கொடுமை! கொடுமை! சாப்பாடே போமே!
அடைமழை! சீச்சீ! அடாமழை நமக்கு!
ஆரா: இடைவிடான் அரசன் வருத்தமேன் உமக்கு?
அண்: [வழுக்கி விழுகிருன்]
அம்மா...எப்படி வழுக்கி விட்டது!
ஆரா: உம்மால் எனது வேட்டியும் கெட்டது!
அண்: முந்தி, கையைக் கொடுமே சற்று!
ஆரா: வந்தேனே உம்மோடு வேலை யற்று!
[கை கொடுத்து]
விசுக்கென எழுந்து வாரும்! வாரும்!
அண்: கசக்குதற்[கு] அருகில் துறையைப் பாரும்!
[எழுகிருன்.]
கிளம்பும் போதே பார்த்துப் போம்படி
விளம்பினுள் அகத்துக் காரி பலபடி!
[மின்னல் வீச்சு]
ஆரா: மின்னல் கண்ணைப் பறித்தெடுக் கிறதே!
அண்: பின்னும் நின்ருல் இடிவிழும் பெரிதே!
[இருவரும் செல்கின்றனர்.]
[திரை] [தொடரும்]

ஆசிரியர் தாயகம் திரும்பல்.

நம் இதழாசிரியர் பாவலரேறு. திருமிகு. பெருஞ்சித்திரனுர் அவர்கள் சிங்கை மலேசியச் சுற்றுச் செலவு மேற் கொண்டிருப்பது அன்பர்கள் அறிந்ததே. (மலேசியாவில் ஆசிரியரவர்கள் சொற் பொழிவு நிகழ்த்திக் கொண்டிருக்கும் ஒரு காட்சியே இவ்விதழ் அட்டைப் படத்தை அணி செய்கின்றது.)

சிங்கையினின்றும் ஆசிரியர் அவர்கள் தமது சுற்றுப் போக்கை முடித்துக்கொண்டு தி.பி. 2005 விடை 26 (9-6-74) ஞாயிறன்று பகல் 12 மணி அளவில் விண்ணூர்தி வழிச் சென்னை வந்து சேரு வார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

—அமைச்சர், தென்மொழி.

நடுவணரசின் இந்தித் திணிப்பு வெறி!

—செந்தமிழ வேங்கை.

ஓரின மக்கட்குத் தாய்மொழியாய் இருப்பதற்கன்றி வேறெவ் வகையிலும் சிறப்பிலா இந்திமொழி, இந்நாட்டின் பொதுமொழி யாகியதை 1937-ஆம் ஆண்டு முதலே தமிழ்க்கடல். மறைமலை யடிகளாரும் தமிழ்த்திரு ஈழத்தடிகளாரும், தமிழர் தலைவர். தந்தை பெரியாரும் அறிஞர். அண்ணாத்துரையாரும் பிறரும் தொடர்ந்து எதிர்த்தே வந்தனர்.

1965-ஆம் ஆண்டு தமிழகம் உள்ளிட்ட பிற மாநிலங்களில் இந்தியெதிர்ப்புப் போர் கடுமையாக நடந்தும், 1967-இல் அறிஞர். அண்ணாத்துரையார் தலைமையில் தி.மு.க. தமிழ்நாட்டாட்சியைக் கைப்பற்றி இந்தி எந்த வகையிலும் தமிழ்நாட்டில் நுழையக் கூடாதென்று சட்டமியற்றியும் நடுவணரசு தன் இந்தி வல்லாண்மை வெறியை எந்த வகையிலும் தடுத்துக் கொண்ட தாகவோ அன்றிக் குறைத்துக் கொண்டதாகவோ தெரியவில்லை. திருவாட்டி. இந்திரகாந்தி அம்மையாரின் முழு நம்பிக்கைக்கும் உரிய காசுமீரப் பிராமணர் திருவாளர். உமாசங்கர் தீச்சத்தின் கீழுள்ள நடுவணரசின் உள்துறை அமைச்சகம் அண்மையில் வெளி யிட்டுள்ள கட்டளைகளே சான்றுகும்.

ஆளுமையுள் இந்தியைக் கட்டாயமாக்க நடுவணரசு பல முனைப்பு முயற்சிகளைச் செய்கின்றது. அண்மையில் உள்துறை அமைச்சகம் எல்லா நடுவணரசுத் துறைகளுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. அதில் கூறப்பட்டிருப்பவை:

"1 மாநிலங்களுக்கு நடுவண் அரசால் அனுப்பப் படுகின்ற சுற்றறிக்கைகள் ஆங்கிலத்தோடு இந்தியிலும் இருக்க வேண்டும். ஆங்கிலத்தின் மொழிப்பெயர்ப்புதான் இந்தியில் அனுப்பப்படுவது என்று கருதாமல் இரண்டு சுற்றறிக்கைகளிலும் அதை அனுப்பும் அதிகாரிகள் கையொப்பமிட வேண்டும்.

2 ஒவ்வொரு நடுவண் அமைச்சகமும், அரசுத் துறைகளும் வெளியிடும் ஆண்டறிக்கையின் இறுதியில் இந்திமொழியை எவ்வெவ் வகையில் பரப்புதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன என்பதை விளக்க வேண்டும்.

3 பல்வேறு அரசுத்துறைகள் வெளியிடும் செய்தித்தாள்களில் இந்தியைப் பரப்புதற்கு முனைந்து முயற்சி எடுக்க வேண்டும்

தொழில் நுட்பங்களை விளக்க இந்திய அரசால் நடத்தப்படும் தாள்களில்கூட இந்திக் கட்டுரைகள் இடம்பெற வேண்டும்.

4 அரசின் ஆளுமையின் கீழுள்ள குழுமங்கள், மாநாகராட்சிகள் வெளியிடும் நாட்குறிப்புகளிலும், அரசிற்கு அனுப்பப்படும் அறிக்கைகளிலும் ஆங்கிலத்தோடு இந்தியும் இருக்க வேண்டும்.

5 நடுவணரசு நிறுவனங்களால் வெளியிடப்படும இந்திப் பொத்தகங்களை இன்னும் மூடுக்கமாகப் பரப்ப வேண்டும். பையுள் வைக்கக் கூடிய புள்ளி விளத்தப் புத்தகங்களும் இந்தியில் அச்சடிக்கப்பட்டு ஏராளமாகப் பரப்பப்பட வேண்டும்.

6 இந்தித் தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகியவைகளைக் கற்பிக்க இரண்டாண்டுக் காலப் பயிற்சித் திட்டம் தொடங்கப்படவிருக்கின்றது. ஆண்டுக்கு 30,000 ஊழியர்களுக்கு இந்தத் திட்டத்தினகீழ் இந்தி பயிற்றுவிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அவ்வத்துறை அதிகாரிகளின் கருத்தைக் கலந்து நாளும் இந்திப் பள்ளிகள் நடத்துவதற்கும் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

7 நடுவணரசு ஊழியர்களுக்குத் தற்போது இந்தியாவில் ஏழு இடங்களில் இந்தி பயிற்றுவிக்கப்படும் நிறுவனங்கள் இருந்து வருகின்றன. இந்த நிறுவனங்களோடு ஐதராபாத்து, கான்பூர் ஆகிய நகரங்களிலும் கூடுதலாக இரு நிறுவனங்கள் தொடங்கப்பட உள்ளன. அதோடு இந்தியைக் கற்பிக்க நடமாடும் நிலையங்கள் மூன்றும் ஏற்படுத்தப்படவுள்ளன."

இவை மட்டுமன்றி 1974 மார்ச்சு 31-ஆம் நாளொடு முடிந்த ஓராண்டுக் காலத்துள் இந்திமொழிக்கு ஆக்கமளிக்க உள்துறை அமைச்சகம் எடுத்துள்ள நடவடிக்கை, நம் அடிமைத் தனத்திற்கு அரக்கு முத்திரை குத்தியது போலுள்ளது.

நடுவணரசு, தன்னுடைய ஊழியர்கள் அந்தந்தத் துறைகளுக்குள்ளேயே எழுதும் தேர்வுகளை இந்திமொழியிலும் எழுதலாமென்றும் இந்தியை ஆட்சிமொழியாக ஏற்றுக் கொண்டுள்ள மாநிலங்கள் இந்திக் கடிதத்தையே 'மூல'க் கடிதமாகவும், பிற மாநிலங்கள் ஆங்கிலக் கடிதங்களை 'மூல'மாகவும் கொள்ளலாமென்றும், கட்டாயமாக இந்தி, ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் சுற்றறிக்கை, கடிதங்களை எல்லா மாநிலங்களுக்கும் அனுப்ப வேண்டுமென்றும், இந்திமொழியில் தட்டெழுத்துப் பொறி போதுமான அளவில்

கிடைக்காமையினுல் ஏற்படும் இடர்ப்பாட்டைத் தவிர்க்க இந்திமொழி மாநிலத்தார் கைப்படவே அனைத்தையும் எழுதியனுப்பலாமென்றும், அமைச்சக வெளியீடுகள், சட்டவரைவுகள் அனைத்திலும் இந்திமொழியைப் புகுத்த வேண்டுமென்றும், தொலைவரிகள் கொடுக்கச் சுருக்க முகவரிச் சொற்களை உடனடியாகப் பதிவுசெய்து கொள்ள வேண்டுமென்றும் நடவடிக்கை எடுத்துள்ளது.

தொலையச்சுப் (Teleprinter) பொறியில் இந்தியைப் புகுத்தியுள்ளதாகவும், இந்தி 'வடிவ' எழுத்துகளைக்கொண்ட புதுவகை 'தொலையச்சு'ப் பொறிகளை 'இந்துத்தான் தொலையச்சு நிறுவனம்' உருவாக்கி வருகிறதென்றும் தில்லிச் செய்தித் தொடர்பு அமைச்சர் போபாலில் கூறியுள்ளார்.

இத்தனைக்கும் மேலாக 2,544 சிண்டுகள் மட்டுமே கற்று வைத்துள்ள சமற்கிருத மொழியில் சூன் முதலாம் நாள் முதல் செய்தி கூறப் போகிறார்களாம்.

உலக வழக்கிலாச் சமற்கிருதத்தைத் தூக்கி நிறுத்திப் பரப்ப நடுவணரசுப் பிராமணர்கள் ஐந்தாண்டுத் திட்டத்தில் தொகை ஒதுக்கிச் செயல்பட்டு வருகின்றனர். இந்திய மக்கள் தொகை 54.79 கோடியில் 2,544 பேர் தாம் சமற்கிருதம் கற்றவர்கள். இவர்களுக்காகச் செய்ப்பூர், பாட்னு, பூனு, திருவனந்தபுரம் ஆகிய நான்கு வானெலி நிலையங்களில் சூன் முதலாம் நாள் முதல் சமற்கிருத அறிக்கையையும் ஒலி பரப்பப் போகின்றார்களாம்.

இத்தனைக்குப் பின்னரும் மானங்கெட்ட தனமாய் உரிமைகளை இழந்து ஒருமைப்பாட்டுப் பாடல் பாடிக் கொண்டிருப்பது எவ்வளவு அறிவு கெட்டச் செயலென்று எண்ணிப் பார்க்க வேண்டாமா? இவை அனைத்திற்கும் ஒரேவழி தமிழ்நாடு தனிநாடாவதன்றி வேறுண்டா? இல்லையென்பதறிக!

தமிழ்நாடு தமிழருக்கே!

'தமிழம்'

(திங்களிதழ்)

ஆசிரியர்: உலகமுதல்வீ.

0 தென்மொழி யணியில் சிறப்புடன் வெளிவந்து கொண்டுள்ளது!

தனியிதழ் 60காசு, ஆண்டுக்கட்டணம் 7 உருபா.

இன்றே உறுப்பினர் ஆகுங்கள்.

'தமிழம்' 17, நாகப்பமுதலி தெரு, சென்னை-2.

தென்மொழி அன்பர்களுக்கு ஒரு நற்செய்தி!

கடந்த அரை நூற்றாண்டுக் காலத்திற்கு மேலாகத் தமிழ்க் கடலிலும் மொழியியல் துறையிலும் மூழ்கி, ஆய்வுப் பணி மேற்கொண்டுள்ள மொழியியல் ஞாயிறு திருமிகு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள்தம் அஃகியகன்ற அறிவின் வெளிப்பாடாகத் திகழ விருக்கும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி உருவாக்கத்திற்கு நம் தமிழ்நாட்டரசு ஆவன செய்துள்ளது.

தமிழக அரசு அமைத்துள்ள 'தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டம்' என்னும் தனித்துறையில் மூதறிஞர் பாவாணர் அவர்கள் இயக்குநராகப் பொறுப் பேற்றுள்ளார்; துணையாக மற்றும் நால்வர் அமர்த்தப் பெற்றுள்ளனர் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இவ்வகர முதலித் திட்டத்தைச் செயற்படுத்தியமைக்காக முதலமைச்சர் திருமிகு. அருட்செல்வனுர் அவர்களுக்குச் 'செந்தமிழ்க் காவலர்' என்னும் சிறப்புப்பட்டம் வழங்கி, இவ்வரும் பணிக்கு ஒல்லும் வகையான் துணை நின்று ஆவன செய்த தவத்திரு. குன்றக்குடியடிகளார் அவர்தம் முயற்சி மகிழ்ந்து பாராட்டத் தக்கதாகும். இநநன் முயற்சியை மேற்கொண்ட தமிழ்நாட்டு அரசுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் திருமிகு. மு. அருட்செல்வனுர்க்கும் மனமார்ந்த நன்றியும் பாராட்டும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தென்மொழி அன்பர்களும் பிறரும் தமிழ்நாட்டு அரசுக்கும், முதல்வர்க்கும் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ள வேண்டுகின்றோம்.

—அமைச்சர்.தென்மொழி.

தமிழ்ச்சிட்டு, கடலூர்-1.

(தனித்தமிழ்ச் சிறுவர் கலையிதழ்.)

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம் உருபா	3-00	4-50	6-00
தனியிதழ் ,,	0-25	0-35	0-50

(அரையாண்டுக் கட்டணம் இல்லை.)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

(முன்னிதழ்த் தொடர்ச்சி.)

பாவேந்தர் பாரதிதாசன்.

—பெருஞ்சித்திரன்.

(காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில்
9—2—73 இல் நடைபெற்ற முத்தமிழ் விழாப்
பாட்டரங்கில் பாடியது)

காட்டைப் பற்றி,யவர் கழறுதல் கேண்மின்!
காட்டையே கண்முன் நிறுத்துதல் காண்மின்!

முட்புதர்கள் மொய்த்ததரை எங்கும்-எதிர்
முட்டுகருங் கற்களும் நெருங்கும்-மக்கள்
இட்டடி எடுத்தெடுத்து வைக்கையிலே
கால்களில் தடுங்கும்-உள்-நடுங்கும்!

கிட்டிமர வேர்கள் பலகூடும்-அதன்
கீழிருந்து பாம்புவிரைந் தோடும்-மர
மட்டையசை வால்புலியின்
குட்டிகள்போய்த் தாய்ப்புலியைத் தேடும்-பின் வாடும்.

நீள்கிளைகள் ஆல்விழுதி ரேடு-கொடி
நெய்துவைத்த நற்சிலந்திக் கூடு-கூர்
வாளெயிற்று வேங்கையெலாம்
வால்சுழற்றிப் பாயவரும்-காடு-பள்ளம் மேடு.

கேளொடும் கிளம்பிவரும் பன்றி-நிலம்
கீண்டுகிழங் கே,எடுத்த தன்றி-மிகு
தூளிபடத் தாவுகையில்
ஊளையிடும் குள்ளநரி குன்றில்-புகும் ஒன்றி!

வானிடை ஓர் வானடர்ந்தவாறு-பெரு
வண்கிளை மரங்கள் என்ன வீறு-நல்ல
தேனடை சொரிந்ததுவும்
தென்னைமரம் ஊற்றியதும் ஆறு-இன்பச் சாறு.

கானிடைப் பெரும்பறவை நோக்கும்-அது
காலிடையே காலிகளைத் தூக்கும்-மற்றும்
ஆனினம் சுமந்தமடி
ஆறெனவே பால்சுரந்து தீர்க்கும்-அடை ஆக்கும்!

பாவேந்தர் நுண்ணோக்குப் பாடல்கள் ஏராளம்!
ஆவலால் ஒன்றிரண் டழகைக் காட்டினேன்!

எத்துணை எளிமை! எத்துணை இனிமை!
கொத்தும் கிளியும் கொய்யாப் பழமும்போல்!
அடுத்து, அவர் கற்பனை எடுத்துக் கூறுவேன்.
மடுத்துளம் மகிழ்வீர்! மயக்கம் தவிர்ப்பீர்!
வானொரு ஆடையாம்! நிலவு பெண்ணாம்!
மானுடல் மறைத்து மதிமுகம் காட்டுமாம்!
என்னே புலவரின் கற்பனை எழுச்சி!

"நீலவான் அடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளி முகத்தை!
கோலமுழு தும்காட்டி விட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்!
சொக்க வெள்ளிப் பாற்குடமோ? அமுத ஊற்றோ?
காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப் பிழம்போ?"

புலவர் பாடல் தீட்டுவ தற்கே
எழுதுகோல் எடுத்தார்; ஏடும் எடுத்தார்!
வந்த கற்பனையை வடித்துத் தருகிறார்.
எந்தப் புலவன் இப்படி எழுதினான்?

"ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட
என்னை எழுதென்று சொன்னது வான்!
ஓடையுந் தாமரைப் பூக்களும் தங்களின்
ஓவியந் தீட்டுக என்றுரைக்கும்;
காடும் கழனியும கார்முகிலும் வந்து
கண்ணைக் கவர்ந்திட எத்தனிக்கும்.
ஆடும் மயில்நிகர் பெண்களெல்லாம் உயிர்
அன்பினைச் சித்திரம் செய்க, என்பார்!

சோலைக் குளிர்தரு தென்றல் வரும், பசுந்
தோகை மயில்வரும் அன்னம் வரும்;
மாலையில் மேற்றிசை வானத்திலே விழும்
மாணிக்கப் பரிதி காட்சி தரும்!
வேலைச் சுமந்திடும் வீரரின் தோள் உயர்
வெற்பென்று சொல்லி 'வரைக' எனும்!
கோலங்கள் யாவும் மலைமலையாய் வந்து
கூவின என்னை இவற்றிடையே

இன்னலிலே தமிழ் நாட்டினிலே உள்ள
என் தமிழ் மக்கள் துயின்றிருந்தார்.

அன்னதோர் காட்சி இரக்கமுண் டாக்கியென்
ஆவியில் வந்து கலந்ததுவே!
இன்பத் தமிழ்க்கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக் கும்நிலை எய்திவிட்டால்
துன்பங்கள் நீங்கும் சுகம்வரும் நெஞ்சினில்
தூய்மையுண் டாகிடும், வீரம் வரும்!"

புதுவைப் புலவன் கற்பனை வளத்தில்
எதுவெடுத் துரைப்பேன்? எதனை விடுப்பேன்!
கற்பனைத் தேனாறு! கவின்நிலா வானம்!
பொற்புனைந் தெடுத்த புதுமணப் பூக்கள்!

"முல்லையிலே சிரித்தபடி தென்றலிலே சொக்கி
முன்னடியும் பெயர்க்காமல் இன்னும் இருக்கின்ற
பொல்லாத மாலைக்குப் போக்கிடமோ இல்லை"

—என்று, அவர் காயும் தலைவியின் ஏசலில்
நின்ற கற்பனை நினைத்து மகிழ்மின்!
மேலும் அத்தலைவி பகலினைக் கடிவாள்!
ஏலுமா நமக்கு? இத்தகு கற்பனை!

"மேற்றிசையில் அனற்காட்டில் செம்பரிதி வீழ்ந்து
வெந்து நீறாகாமல் இருப்பதொரு வியப்பே!"
பாரதி தாசன், தன்உள்ளக் கொதிப்பைப்
பாரதிர முழக்குதல் பாருங்கள் இங்கே:

"மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம்; உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர்செல் வராம்;இ தைத்தன்
கண்மீதில் பகலி லெல்லாம்
கண்டுகண் டந்திக் குப்பின்
விண்மீதில் கொப்ப ளித்த
விரிவானம் பாராய் தம்பி!"

எப்படி? அவர்தாம் இயம்பிய கற்பனை?
இப்படிப் புரட்சியாய் எழுதிய தவர்மனம்!

அடுத்து, ஒரு புலவருக் கிருக்கும் ஆற்றல்
எடுத்தது உவமையால் விளக்குதல்; இல்லையா?
பாவேந்தர் உவமைகள் பழுதிலா உவமைகள்.

"பொரியலோ பூனைக்கண்போல் பொலிந்திடும்" என்பார்.

"குத்துண்ட கண்ணாடி கொண்டபல வீறல்கள்போல்
துத்திக்காய் போலச் சுடர்முகத்தை நீசுருக்கி ஏனழுதாய்"
—என்று கேட்பார்!
"கேள்வியால் அகலும் மடமைபோல்
நள்ளிரவு மெதுவாய் நடந்துகொண் டிருந்தது"
என்றே அறிவோடு உவமையைப் பொருத்துவார்.
பரிதியின் வரவால் இருள்வில கியதை,

"தொட்டியின் நீலத்தில் சுண்ணாம்பு கலந்த
கலப்பென இருள்தன் கட்டுக் குலைந்தது"
என்பார்!
—இங்கோர் ஏழைக் குடிசை!
மிகவும் சிறியது; மிகமிகச் சிறியது!
புகவும் இயலாப் புன்மைக் குடில்அது!
எப்படிச் சொல்வீர் அதனை? எண்ணுங்கள்!
அப்படிச் சொன்னால் அனைவர்க்கும் விளங்குமா?
இப்படிச் சொன்னால் எல்லார்க்கும் தெரியுமா?
என்றே எண்ணி, எண்ணி இயம்புதற்
கொன்றும் இயலாமல் உழல்கையில் சொல்வார்:
"கூனன் புகுந்தாலும் குனிந்து புகும்குடிசை"
எப்படி அவர்தம் உவமை இயல்திறம்?
சிட்டுக் குருவியை எல்லாரும் கண்டோம்!
"கொத்தும் அதன்மூக்கு முல்லை யரும்பு!
மல்லி பிளந்தது போன்றது அதன்கண்!"
என்றுசொன் னோமா? பாவேந்தர் சொன்னார்!
"பின்னிய ஆடை காற்றில்
பெயர்ந்தாடி அசைவ தைப்போல்
நன்னீரில் கதிர் கலந்து
நளிர்கடல் நெளிதல்" கண்டார்!

நாம்கண் டோமா? நறுக்கு நறுக்கென
ஊம்எனும் முன்னே, உவமையால் விளக்கிய
புலவன் பாரதி தாசனைப் போல(......)
சிலபேர் இருப்பார்; பலபேர் இருக்கார்!

காலுக்குப் புன்னையிலை போலும் செருப்பணிந்து
கையில் விரித்தகுடை தூக்கி—நல்ல
கல்விக் கழகமதை நோக்கி—காய்ச்சும்
பாலுக்கு நிகர்மொழிப் பாவைநீ செல்லுவதைப்
பார்க்கும் இன்பந்தானடி பாக்கி!

மேலுக்குச் சட்டையிட்டு மெல்லியசிற் றுடைக்கட்டி
வீட்டினின்றும் ஆட்டமயில் போலே—கைம்
மேற்சுவடி யோடுதெரு மேலே—கூர்
வேலுக்கு நிகர்விழி மெல்லிசெல் வதைக்காண
வேண்டுமே இப் பெற்றவள் கண்ணாலே!

....

மாவடு நிகர்விழிச் சினனஞ் சிறுமியே,நீ
மங்கை எனும் பருவம் கொண்டு—காதல்
வாழ்வுக்கோர் மாப்பிள்ளையைக் கண்டு—காட்டித்
"தேவை இவன்" எனவே செப்பும்மொழி எனக்குத்
தேன்! கனி! தித்திக்குங்கற் கண்டு!

கோடிக் கணக்கில் உவமைகள் கூறுதல்
வாடிக்கை அவர்க்கு! வரட்சியங் கில்லை!

அடுத்தது பாத்திறன்! அத்திற மைக்கும்
எடுத்த புலவன் பாரதிதாசனுக்
கீடில்லை என்பேன்! எணைமறுப் பீரா?

கண்ணுக் கொரு வண்ணப்புறு!
காதுக்கவள் கானக்குயில்!
பெண்ணுக்கரா சானவளை
வந்தால் வரச்சொல்—எனக்கே
பேச்சுப்படி ஆசைமுத்தம்
தந்தால் தரச்சொல்!

சொல்லச் சொல்ல சுவைத்திடும் கட்டி
வெல்லச் சொற்கள்! துள்ளு நடை!

ஓர் நிலவே அவள்தானோ? கதிர்தானோ?
கொம்புத் தேனோ—நடை
ஓவியமோ புள்ளி மானோ?

சிந்துத் தேனிசை சிந்திடும் பாக்கள்!
கைப்பிடியில் கூட்டிவரக் கட்டளையிட் டாளெனவே
செப்புகின்றாய் வாழியவே வாழி!—நான்
ஒப்பவில்லை என்றுரைப்பாய் தோழி!

மந்தையின் மாடு திரும்பையிலே—அவள்
மாமன்வரும் அந்தி நேரத்திலே
குந்தியிருந்தவள் வீடு சென்றாள்—அவள்
கூட இருந்தாரையும் மறந்தாள்!

தொந்தி மறைந்திட வேட்டிகட்டி—அவன்
தூக்கி வந்தானொரு வெல்லக்கட்டி
இந்தா எனக்கொடுத் திட்டாண்டி—அவன்
எட்டி ஒரே முத்தம் இட்டாண்டி!

கட்டிவெல்லத்தைக் கசக்கு தென்றாள்—அவன்
கட்டாணி முத்தம் இனிக்கு தென்றாள்!
தொட்டியின் நீரில் குளிக்கச் சொன்னாள்!—அவன்
தோளை அவள்ஒடித் தேய்த்து நின்றாள்!
'கொட்டிய நீரில் குளிர்ச்சி உண்டோ—இந்தக்
கோடை படுத்திடும் நாளில்' என்றாள்!
'தொட்டியின் தண்ணீர் கொதிக்கு' தென்றான்-'தீ
தொட்ட இடத்தில் சிலிர்க்கு' தென்றான்.

இசைத்தேனில் காதலைப் பிசைந்த பாக்கள்!
பேச்சுப் போலவே பாநடை யிருக்கும்!
மூச்சுப் பிடித்துப் பாடிட வேண்டா!
இதோ பாருங்கள் பாநடை எழிலை!

கிழக்கு வெளுக்கக் கிளிமொழியாள் தங்கம்
வழக்கப் படிவீட்டு வாயிற் படிதுலக்கிக்
கோல மிட்ட பின்பு குடித்தனத்துக் கானபல
வேலை தொடங்கி விரைவாய் முடிக்கையிலே
ஏழுமணிக் காலை எழுந்தாள் அவள்மாமி!
வாழுகின்ற பெண்ணாநீ வாடி என்றாள் தங்கத்தை!
இந்நேரம் தூங்கி இருந்தாயா? என்பிள்ளை
எந்நேரம் காத்திருப்பான் இட்டளிக்கும் காப்பிக்கும்?
என்றே அதட்டி இழுத்துத் தலைமயிரை
நின்ற பொற்பாவை நிலத்தில் விழச்செய்தாள்.

எப்படிப் பாநடை? யாப்பெலாம் இவர்க்கு
ஒப்பஅடி போட்டே உடன்வர வில்லையா?
புலவர்க்குத்தான் தமிழ் என்ற போக்கினை
இலையென் றாக்கிய ஈடிலாப் பாவலர்!
இப்படிப் பாத்திறன்! அடுத்தது இயற்கை,-
ஈடு பாட்டினை இயம்பவே வேண்டா!
பாடு பட்டே இயற்கையைப் பாடும்
கேடுகெட்ட கீழ்மைப் புலவர்கள்-
-போல்இல்லை இந்தப் புரட்சிப் புலவன்!
ஓலைச் சுவடிக் காலத்தும் இவன்போல்
இயற்கையைப் பாடுவோர் அரியராய் இருந்தனர்!

—(தொடரும்)

"பயிர்களின் மூலத்தோன்றல் நடுவங்கள்".

வ. அஞ்சனம் அழகன். அறி.இ. (வேளாண்மை)

தற்கால மாந்தன் வேளாண்மை செய்யும் பயிர்கள் எல்லாம், பழைய மூதாதைப் பயிர் வகைகளிலிருந்து உருவானவையே. இரசிய அறிவியலறிஞர் விவிலோவு உலகநாடுகளின் பல இடங்களைச் சுற்றிவந்து, பேணி வளர்க்கப்படும் விளைபயிர் வகைகளையும், பழைய மூதாதைப் பயிர்வகைகளையும் ஆய்ந்து தொகுத்தார். அவற்றில் காணப்பட்ட வேற்றுமையை வைத்துக் கொண்டு ஆராய்ந்ததில் கால்வழி மாற்றங்கள் (Genetic diversity), உலகின் குறிப்பிட்ட சில இடங்களில் நடைபெறுகின்றன எனக் கண்டார். அந்த இடங்களில் பேணி வளர்க்கப்படும் விளைபயிர் வகைகளும், பழைய காட்டு வகைகளும் ஏராளமான அளவில் வளர்ந்திருந்தன. காட்டாக, தென் அமெரிக்காவின் ஆண்டிசு பகுதிகளில், பல வேறுபட்ட கிழங்குதரும் உருளைக்கிழங்கு வகைகளும், கிழங்குதராக் காட்டு உருளைக்கிழங்குத் தனிகங்களும் காணப்பட்டன. இந்த இடங்களை விவிலோவு பயிர் வகைகளின் மூலத்தோன்றல் நடுவங்கள் (Primary centre of origin) என்று அழைத்தார். இவ்விடங்களில் எல்லா பயிர் வகைகளும் தோன்றி, உலகின் பல இடங்களுக்கும் நாளடைவில் பரவின என்பது விவிலோவின் கோட்பாடு.

பேணி வளர்க்கப்படும் பயிர்வகைகளின் மூலத் தோன்றல் நடுவங்கள்:

உலகிலுள்ள பயிர்களின் மூலத்தோன்றல் நடுவங்கள் எட்டு என விவிலோவு கண்டுபிடித்தார்.

1. சீனு:

காடுசூழ்ந்த சீனுவின் நடு மேற்குப்பகுதிகளில் ஊட்ட அவரை, சூடம் முதலிய பயிர்கள் ஏராளமாகவும் முதலாவதாகவும் தோன்றின. இப்பகுதியை மூலத்தோன்றல் நடுவமாகக் கொண்ட பயிர்கள் பின் வருமாறு:

ஊட்ட அவரை (Soyabean), கரும்பு (Saccharum sinense), சூடம் (Cinnamonum camphora), கம்பளிப்பேரி (பீச்) (Prunus Persica), பேரி (Pear), தேயிலை (Thea sinensis).

2. தென்கிழக்கு ஆசியா:

இப் பகுதியில் இந்தியா, பர்மா, தாய்லாந்து, பிலிப்பைன்சு, மலேசியா, இந்தோனேசியா, ஆகிய நாடுகள் பங்கேற்கும். இப் பகுதியை மூலத்தோன்றல் நடுவமாகக் கொண்ட பயிர்கள்:

நெல் (Rice), சோளம் (Sorghum), கரும்பு (Sugarcane), கருங்கண்ணிப் பருத்தி (Gossypium arboreum), மிளகு (Piper nigrum), ஏலம் (Elattaria cardamomum), வாழை (Musa

sapientum), மா (Mangifra indica), புளி (Tamarindus indica), எள் (Sesamum indicum).

3. நடு ஆசியா:

இப்பிரிவில் வடமேற்கு இந்தியா, ஆப்கானிசுதான், உசுபெகிசுதான், ஆகிய நாடுகள் பங்கேற்கும். இவற்றில் கீழ்க்குறிப்பிடும் பயிர் வகைகள் பிறந்தன.

கோதுமை (Wheat triticum vulgare), குட்டைக்கோதுமை (Clubwheat. T. Campactum), பட்டாணிக்கடலை (Pea. Pisum sativum), பருத்தி (Gossypium herbaceum).

4. அண்மைக்கிழக்கு நாடுகள்:

ஆசியாமைனர், ஈரான் முதலிய நாடுகள் இதன் கீழ்வரும். இவ்விடங்களில் கீழ்க் குறிப்பிடும் பயிர்கள் தோன்றின.

கோதுமை (Ein korn wheat. Triticum Monococeum), குதிரைமசால் (Lucerne. Medicago sativa).

5. நடுத்தரைக் கடற்கரைப் பகுதிகள்:

இப்பகுதியில் தோன்றிய பயிர்கள்.

மாக்கரோனி கோதுமை (Triticum durum), எம்மர்கோதுமை (Triticum dicoceum).

6. அபிசினியா:

இப்பகுதியில் தோன்றிய பயிர்கள் பின்வருமாறு:

பார்லி (Hordeum), சோளம் (Sorghum), கம்பு (Pearl millet), கேழ்வரகு (Finger millet), குளம்பி (Coffea arabica).

7. நடுஅமெரிக்கா (மெச்சிக்கோ):

இப்பகுதியைத் தாயகமாய் கொண்டப் பயிர்கள் ஆறு. அவை:

மொக்கைச் சோளம் (Zea Mays), கம்போடியாப் பருத்தி (Gossypium hrisutum), மிளகாய் (Chilli), சர்க்கரைவள்ளிக் கிழங்கு (Sweet potato), கொக்கோ (Theobroma Caeao), பப்பாளி (Papaya).

8. தென் அமெரிக்கா:

பெரு, சிலி, பிரசில் முதலிய நாடுகள் இப்பகுதியில் அடங்கும். ஏழு பயிர் வகைகள் தென்அமெரிக்காவைத் தாயகமாய் கொண்டுள்ளன. அவை:

உருளைக் கிழங்கு (Potato), சீமைத் தக்காளி (Tomato), புகையிலை (Tobaco), நெட்டையிழைப்பருத்தி (Gossipium barbadense), சின்கோனு (Chincona), இழுவை (இரப்பர்) (Hevea brasiliensis), மரவள்ளிக்கிழங்கு (Tapioca), முந்திரி (Cashewnet).

(முன்னிதழ்த் தொடர்ச்சி.)

ஆரிய வல்லாண்மையின் வரலாறு.

தொகுத்தளிப்பவர்! தாயம்மாள் அறவாணன். க.மு.

இந்தப் பார்ப்பனக் கொட்டத்தை அடக்க அன்பு, தொண்டு ஆகியவற்றைக் குறியாகக் கொண்ட ஒரு பெருமைசான்ற மதத்தை அறிமுகம் செய்தார் புத்தர்.

பார்ப்பனியம் புத்தமதத்தை எப்படிக் கொன்றது?

1 காவு கொடுப்பது நின்றுவிட்டது. பார்ப்பனர்கள் வருவாயும் ஊதியமும் தரும் தங்கள் தொழில், மதக்குரு என்றபதவி, சாய்கால் ஆகியவற்றை இழந்துவிட்டனர்.

2. குலமுறை புறக்கணிக்கப் பட்டது.

3. சமற்கிருதம் ஒதுக்கப்பட்டு மக்களின் மொழியாகிய பாலி வழக்கில் வந்தது.

4. மன்னர்கள்மீதும் நாட்டின் ஆட்சியிலும் பார்ப்பனர்களுக்கிருந்த அதிகாரம் குறைந்தது.

5. பொதுமக்கள் மீது அவர்களுக்கிருந்த மதக்குரு ஆட்சியும் சாய்காலும் குறைந்தன.

புத்தமதம் இருந்ததுவரை பார்ப்பனனும் அவன் கொள்கைகளும் தழைக்க முடியவில்லை.

1. எல்லாப் படையெடுப்பாளர்களுக்கும் வலுவாய்ந்த கோட்டையாகத் திகழ்ந்த வடமேற்கு இந்தியாதான் பார்ப்பனர்களுக்கும் வன்மை பொருந்திய இடமாக இருந்தது. எனவே, கிரேக்க, துருக்கிய, சித்திய, சீனப் படையெடுப்பாளர்களோடு நட்புகொள்ள அவர்களுக்கு வாய்ப்பேற்பட்டது. புத்த மன்னர்களையும், நிறுவனங்களையும் தாக்கவும், நசுக்கவும் படையெடுப்பாளர்களைப் பயன்படுத்த வாய்ப்பேற்பட்டது.

2. புத்த அரசியல் நெறிகளில் கலகங்கள் தூண்டி விடப்பட்டன. பல மன்னர்கள் கொல்லப்பட்டனர். சில வேளைகளில் பார்ப்பனர்களே மன்னராயினர்.

3. பார்ப்பனர்கள் புத்த மடங்களில் சேர்ந்து விரைவில் அவற்றின் சொத்து, ஆளுமை மற்றும் மதத் தொடர்பான கொள்கைகள் மீது வல்லாண்மை செலுத்தத் தலைப்பட்டனர்.

4. புத்த பிக்குகளாயிருந்த பார்ப்பனர்கள் கூட, தீண்டாமையையும், ஏனைய தனித்தியங்கும் வழக்கங்களையும் குல உயர்வையும் மேற்கொண்டனர்.

5. தூயோர்களையும் மதிப்பிற்குரிய தேவியரையும் அவர்கள் தோற்றுவித்து மதக்குருக்களுக்குப் பேரன்பளிப்புகள் கொடுப்பதையும் உருவங்களை வணங்குவதையும் ஊக்குவித்தனர்.

6. உண்மையில் பார்க்கும் போது, அவர்கள் புத்த மதத்தில் பல தந்திரங்களையும், ஏமாற்றுகளையும் மந்திரம், தந்திரம், ஓகம் பெண் வணக்கம், காளி வணக்கம், போன்ற பார்ப்பனச் சுரண்டல் களையும் நுழைத்து விட்டார்கள்.

7. அவர்கள் புத்தமதத்தை வடபகுதி 'பிராமண பௌத்த'மென்றும், தென்பகுதி 'பிராமணமற்ற பௌத்தம்' என்றும் இரண்டாகப் பிளவுபடுத்துவதில் வெற்றி கண்டார்கள். இங்ஙனம் புத்தநெறி அதன் கொள்கை வலிமையை இழந்தது.

8. அவர்கள் பல அரசர்களோடு ஒருவகை உடன்பாடு செய்தார்கள். அதன்படி அவர்கள் அரசர்களுடைய முறைகளை ஏற்று அதை, பார்ப்பன முறைப்படியான கடவுள்கள், குலங்கள், பிராமணர் மேன்மை ஆகியவற்றுள் நுழைத்தார்கள். அவர்கள் அரசர்களின் ஒத்துழைப்போடு உருவ வணக்கத்திற்கான பெருங்கோவில்கள் கட்டினார்கள். பெருவீரர்களான இராமன், கண்ணன், மற்றும் நூற்றுக் கணக்கான மூதாதையார்களைக் கடவுள்களாக வழிபடச் செய்தார்கள். இந்தப் புதிய பார்ப்பனியம்தான் தற்போது இந்து சமயம் என அழைக்கப்படுகிறது. கோவில்களில் மக்களைக் கவருவதற்காகவும், ஏமாற்றுவதற்காகவும், பணத்தை இழக்கச் செய்வதற்காகவும், திருவிழாக்கள், புனைவுகள், இசை, நடனம், விருந்து, வேடிக்கைகள் போன்ற எல்லா வழிமுறைகளையும் அவர்கள் கையாண்டார்கள்.

9. கோவில்களின் வருமானத்தைப் பகிர்ந்து கொள்ள மன்னர்களோடு ஓர் உடன்பாடு கண்டார்கள்.

10. பெரும்பாலும் இந்த உடன்பாட்டினுல்தான் மன்னர்களின் கருத்தான பகவத்கீதை, பார்ப்பன இலக்கியமான மாபாரதத்தில் இடம் பெற்றிருக்கக் கூடும்.

11. பார்ப்பனப் பழங்கதைகளான இராமாயணமும், மாபாரதமும் இன்னும் பலவும், குலச்சட்டங்கள், வரைவுகள், நூற்பாக்கள் ஏனைய,

பார்ப்பன இலக்கியங்கள் ஆகியவையும் விரிவாகப் விளம்பரப் படுத்தப்பட்டன.

12. அவர்கள் அயல் நாட்டுப் படையெடுப்பாளர்களை, புத்த அரசர்கள் மீது தாக்குமாறு தூண்டினர்.

13. அவர்கள் அயல் நாட்டிலிருந்து வந்தவர்களைக் கொண்டு ஒரு புதிய அரசக் கூட்டத்தைப் (இராச புத்தானியர்கள்) படைத்தார்கள். அந்தப் புதுக்கூட்டத்தினர் உருவ வணக்கத்திற்கு ஆதரவளித்து அபுமலையில் ஒரு பெரிய வேள்வி நடத்தினார்கள். பார்ப்பனர்களால் படைக்கப்பட்ட இந்தப் புதிய மன்னர்கள், புத்த மன்னர்களின் ஆட்சிக்குக் குழி தோண்டவும் புத்தமதத்தை அழிக்கவும் செய்தனர்.

ஏறத்தாழ, கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் இவ்வாறுகப் புத்தமதம் முற்றிலும் தகர்க்கப்பட்டது. அதனிடத்தில் பல கோவில்கள் எழுந்தன. வேற்றுளர் இந்தியாவை மிகு விரைவாக அடிமைப் படுத்தினர். மக்கள் தங்கள் வலிமை, ஒற்றுமை, மற்றும் தன்மானத்தை இழந்து பார்ப்பனியத்தின் அடிமைகளாக மாறினர். நாடு மொகலாயர் கைகளுக்குப் போய்ச் சேர்ந்தது. எனவே இந்து மதம் போன்று ஒரு மதம் புத்தர் காலத்திற்கு முன் இருந்தது இல்லை என வரலாறு உறுதிப்படுத்துகிறது. அறிமுகமான தனி ஒருவனால் நிறுவப்பட்ட மதமும் அன்று அது. பெரும் கோவில்கள், நூற்றுக்கணக்கான தெய்வங்களை வழிபடும் உருவ வணக்கம், இவை எல்லாவற்றின் மீதும் பார்ப்பன மதக்குருக்களின் ஆளுகை, நாடெங்கும் குலச் சட்டத்தை ஏற்றுக்கொளல் போன்றவற்றால் ஆக்கப்பட்ட இன்றைய இந்து மதம் புத்த மதத் தேய்வுக்குப் பின்னால் தோன்றியதேயாகும். எனவே இந்து மதம் என்பது வெற்றியடைந்த பார்ப்பனியமே யன்றி வேறன்று.

தங்கள் திட்டங்களை நிறைவேற்ற, பார்ப்பனர்கள் வேற்றுப் படையெடுப்பாளர் உதவியைப் பயன் படுத்தினர். சந்திரகுத்தன் தான் இந்தியாவின் முதல் பேரரசன். மகதநாடு இந்திய அதிகாரம் மற்றும் சாய்காலின் நடுவமாய் இருந்தது. கௌதில்யா என்ற சூழ்ச்சித்திறம் படைத்த பார்ப்பனன் உதவியால் அவன் மற்ற அரசர்களை அடிமைப் படுத்திப் பேரரசனானான்.

சந்திரகுத்தன் மகத மன்னரின் கீழ் ஓர் அதிகாரியாக இருந்தான். அவன் மன்னனுக்கு எதிராகக் கலாம் செய்யத் தூண்டப்

பட்டான். கலவரம் தோல்வி கண்டது. சந்திரகுத்தன் பஞ்சாபிலுள்ள பார்ப்பனர்களிடம் அடைக்கலம் புகுந்தான். அங்கிருந்து கொண்டு மன்னனுக் கெதிராக சூழ்ச்சி புரியத் துவங்கினன். மா அலெக்சாந்தர் இந்தியா மீது படையெடுத்த போது சந்திரகுத்தனும் அவன் பார்ப்பன நண்பர்களும் மகதாவைத் தாக்கும்படி அவனை அழைத் தார்கள்.

காசுமீர் மன்னன் செயப்பிரன் ஒரு பார்ப்பனனது சாவத்தால் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. வேறு சொற்களில் கூறினல் பார்ப்பனர்கள் தாம் அவனைக் கொன்றனர்.

எல்லாக் கூட்டத்தினரையும் நிறைவு செய்வதற்காகக் கோவில் வணக்கத்தோடு கூடிய பழங்கதைகளின் அடிப்படையில் ஒரு புது முறை மதம் தொடக்கப்பட்டது. குல அமைப்பு நிறுவப்பட்டது. பார்ப்பன வல்லாண்மையின் அடிப்படையில் இந்தப் புது இயக்கம் தோன்றி யிருக்கலாம். கோவில் வணக்கமும் குல அமைப்பும் இந்து சமயத்தின் தொடக்கமாக இருந்தன. பார்ப்பனர்கள் காவுகள் செலுத்தும் மதத்தைக் கைவிட ஒத்துக்கொண்டனர். அவர்கள் மன்னர் கொள்கையான 'உபநிடதங்'களை ஏற்றுக் கொண்டனர். இராமன் கண்ணன் இன்னும் தேயத் தலைவர்கள் வணங்கக் கூடிய வர்கள் என ஏற்றுக் கொள்ளப்பட்டனர். மன்னர் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. மன்னர் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று காட்டவே, 'கீதை' மாபாரதத்தில் உட்படுத்தப்பட்டது. புத்த மதத்தைப் பின் பற்றியவர்களை நிறைவு செய்யப் புத்தர் விட்டுணு வின் ஒரு தோற்றம் என ஏற்றுக் கொள்ளப்பட்டார். ஆனல் எல்லா இந்திய மன்னர்களையும் பார்ப்பன ஆளுகையுள்ள ஓர் அனைத் திந்திய பேரரசுள் கொண்டு வந்தாலன்றிப் பார்ப்பனியம் நிலைத் திருக்காது. ஆகவே பார்ப்பனர் வெளியிலிருந்து வந்தவர்களைக் கொண்டு ஒரு புதிய அரச குலத்தைப் (அரச புத்தானியர்) படைத் தனர்.

வெற்றியடைந்த பார்ப்பனத் தன்னுண்மையே இந்து சமயம்.

ஒரு நாட்டின் நிலை முதன்மையாக அதன் தலைவர்களின் குணங்-களைப் பொறுத்திருக்கிறது. பழங்காலம் தொட்டே பார்ப்பனர் இந்தியாவின் தலைவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அரசு, மதத் தொடர்புகளில் அவர்களைப் போல் வேறு எந்த குமுகாயத்

தினரும் எந்தச் சமயத்திலும் அதிகாரம் செலுத்தியது கிடையாது. வேறு எந்தத் தலைவர்களும் இந்திய மதக்குருக்களைப்போல் மக்கள் மீது ஈவிரக்கமற்ற முறையில் இவ்வளவு கொடும் விளைவுகளோடு கூடிய தங்கள் அதிகாரத்தை இவ்வளவு நீண்டகாலம் செலுத்தியதும் கிடையாது.

பார்ப்பனர்கள் மொகலாயர்களால் கைப்பற்றப்படாத தென்னாடு களுக்குக் குடியேறினர். அங்குத் தங்கள் பொய்ப் பழங்கதைகளையும், கலைநூல்களையும், விளம்பரப் படுத்தினர். அவை பழம் முனிவர்களால் எழுதப்பட்டவை எனப் பொய்யாகக் கூறினர். பெரும்பாலும் மொக லாயர் வெற்றிக்குப் பின்புதான் பதினாறு எழுத்தாளர்களால் கலை நூல்கள் உண்டாக்கப்பட்டன.

இந்தக் காலத்திற்கேயுரிய கலைநூல்களின் சில குறிப்பிட்ட சட்டங்களாவன.

1. குலப்பாகுபாடு கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

2. கலப்புத் திருமணமும், கலந்து உண்பதும் கண்டிப்பாகத் தடை செய்யப்பட வேண்டும்.

3. பொற்கொல்லர்கள், சலவையாளர்கள், நெசவாளர்கள், தச்சர்கள், வணிகர்கள் முதலியோர் கீழ்க்குல மக்களென ஒதுக்கப் பட வேண்டும்.

4. பற்பல அளவில், தீண்டாமையை நடைமுறைப் படுத்த வேண்டும்.

5. சில குமுகாயங்கள் 'மிலேச்சர்' களெனவும் 'சண்டாளர்' எனவும் அதாவது ஒதுக்கப்பட வேண்டிய தூய்மையற்ற மக்கள் என அறிவிக்க வேண்டும்.

6. இசுலாமியர்கள், கிறித்தவர்கள், சீனர்கள், சப்பானியர்கள் முதலியோரை அழுக்கேற்படுத்தும் தூய்மையற்ற மக்கள் என அறி விக்க வேண்டும்.

7. குற்றங்களுக்குத் தண்டனையும் உழைப்புக்குக் கூலியும் குல அடிப்படையில் முறைப்படுத்த வேண்டும். பார்ப்பான் திருடினால் மறு வாழ்வில் நன்மை கிட்டும். 'சூத்திரனு'க்குப் பொருள்கள் கொடுத்தல் தீயுழிக்கு இட்டுச் செல்லும். (Sautraniti II 811)

8. கடற் செலவைத் தடை செய்ய வேண்டும்.

9. உருவ வணக்கம் அதன் எல்லாக் கீழ்நிலை வடிவங்களிலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

10. கடவுள்களை வியப்பான உருவங்களில் சித்தரிக்க வேண்டும்.

11. கயவர்களுக்குத் தீ அல்லது நீரில் தற்கொலைப் பரிவுரை செய்ய வேண்டும்.

12. பார்ப்பனர்களின் தூய்மைத் தொடக்கம் பெருமைப் படுத்தப்பட வேண்டும். பார்ப்பனர்களுக்கு இருக்கும் ஆற்றல் அவர்களுக்கு உயர்ந்த அன்பளிப்பு அளிப்பதால் ஏற்படும் நன்மை, அவர்களை வணங்குவதால் ஏற்படும் நன்மை போன்ற அவர்கள் வியப்பு ஆற்றல்கள் பெருமைக் குரியவை.

18. குழந்தைத் திருமணத்தையும், கைம்பெண்களுக்கு உடன் கட்டை யேறுதலையும் வற்புறுத்த வேண்டும், கைம்பெண் மறுமணம் புரிவதைத் தடுக்கவேண்டும்.

(எடுத்துக்காட்டு)

1. இருமல் என்பது ஒரு பார்ப்பனனைக் கொன்ற தண்டனைக் குரியது. கழுவாய்: தங்கத்தால் ஒரு தாமரைப் பூ செய்து பூசை செய்து பின்பு அந்தத் தாமரை மலரை ஒரு பார்ப்பனனுக்குக் கொடுத்துவிட வேண்டும்.

2. காய்ச்சல் என்பது ஒரு அரசனைக் கொன்ற தண்டனைக் குரியது. கழுவாய்: மாதேவ மந்திரத்தை நூறுதடவை பலுக்க வேண்டும்; பதின்மூன்று பார்ப்பனர்களுக்கு உணவளிக்க வேண்டும்.

3. சென்ற பிறவியில் ஒரு பெண் மாற்றான் ஒருவனோடு வாழ்ந்து அவனோடு தன்னைச் சுட்டெரித்துக் கொண்டதால்-தான் ஒரு பெண்ணின் கணவன் அவள் இறக்கு முன் இறந்து விடுகிறான். கழுவாய்: வெண் பனியில் தன்னை புதைத்துக் கொள்ள வேண்டும். அல்லது வாழ்க்கை முழுவதையும் மகிழ்வின்றிக் கழிக்க வேண்டும்.

4. முந்தைய வாழ்க்கையில் அறமற்று நடந்திருந்தால் ஒரு பெண்ணுக்குத் தீட்டுக் கழிவதில்லை. கழுவாய்: ஒரு பானையை நூறு கிணறுகளிலிருந்து கொண்டு வந்த நீரை யூற்றி நிரப்ப வேண்டும். பின்பு அதனுள் தங்கத்தையிட்டு ஒரு பார்ப்பனனுக்குக் கொடுத்துவிட வேண்டும். சில குழந்தைகளையும் வளர்க்க வேண்டும்.

5. ஒருத்தி பெருமை கொண்டு கணவனை மதிக்காமல் இருப்ப தால்தான் அவளுக்கு ஒரேயொரு மகள் பிறக்கிறாள். கழுவாய் ஒரு தேவியின் உருவத்தைத் தங்கத்திலே செய்து தானம் கொடுக்க வேண்டும்.

வழக்குகளை உசாவித் தீர்ப்பு வழங்குவதற்காக மெய்யாய்வுகள் நடத்தப்பட்டன. பார்ப்பனர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஒரே துலாவில் நிறுக்கப் பட்டார்கள். வணிகர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் நீருக்கடியில் குறிப்பிட்ட நேரம்வரை மூழ்கி இருக்க வைத்தார்கள். தாழ்ந்தவர்களைப் பொறுத்த வரையில் கொடும் நஞ்சு அவர்களுக்குக் கொடுக்கப் பட்டது. (Ayin Akbari)

பார்ப்பனர்கள் தங்களைப் 'நிலத்தேவர்கள் அதாவது இந்நிலத் தின் கடவுள்கள் என்று உரிமை பாராட்டத் தொடங்கினர். நிலம் அனைத்தும் தங்களுக்கே உரிமைத்தென அவர்கள் உரிமை கொண்டனர். கேரளம் போன்ற இடங்களில் பார்ப்பனர்கள் மாத்திரமே சொந்தமாக நிலம் வைத்திருக்க உரிமைப் பெற்றிருந் தனர். மற்ற அனைவரும் இவர்களிடமிருந்தே நிலத்தை குத்தகைக்கு எடுக்க வேண்டியதாயிருந்தது. சிவாசி தனது முழு நாட்டையும் தன் பார்ப்பனக் குருவிற்குக் கொடுத்தான். திருவிதாங்கூர் மன்னர் தமது அரசைத் தம் கடவுளுக்கு அளித்து விட்டு கடவுளின் ஊழிய ராக அரசு புரியத் தலைப்பட்டார். ஒவ்வொரு ஆறுவது ஆண்டும் பல இலக்கக்கணக்கான உருவாய்ச் செலவில் பார்ப்பனர்களுக்கு ஒரு திருவிழா நடத்த வேண்டியிருந்தது. அரச புதனியில் பெரும்பாலும் எல்லா மாநிலங்களிலும் ஐந்தில் ஒரு பங்கு நிலம் கோவில்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் கொடுக்கப்பட்டது. அரச குலம் அழிந்து விட்டது எனவும், பார்ப்பனரல்லாதவரனைவரும் 'சூத்திரர்க' ளென்றும் மதக்குருக்கள் அறிவித்தனர்.

புதிய கோவில் இயக்கம் இந்து மன்னர்களால் அரவணைக்கப் பட்டது. ஏனெனில் மூட மக்களிடமிருந்து பணம் தண்ட இதுதான் மிகவும் எளிய வழியாய் இருந்தது. பணம் தண்ட, பற்பல தந்திர ஏமாற்று வேலைகள் கையாளப்பட்டன. கௌதில்யரின் 'அருத்த சாத்திர'த்திலிருந்து ஒரு சில மேற்கோள்களை நோக்குவோம்.

1. மதத்தொடர்பான நிறுவனங்களின் மேற்பார்வையாளர், கடவுள்களுக்கான எல்லாச் சொத்து மற்றும் பணத்தைப் பிரித்து கருவூலத்துக்கு எடுத்துச் செல்வார்.

2. ஒரு தீய அறிகுறி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டு ஒரு கடவுள் அல்லது ஒரு பீடம் நிறுவப்படும். அல்லது துறவிகளுக்கு ஒரு மனை திறக்கப்படும். அதற்காக ஓர் ஊர்வலம் ஏற்பாடு செய்யப் பட்டுப் பணம் பறிக்கப்படும்.

3. மன்னரின் தோட்டத்துமரம் ஒன்றில் காலம் தவறி ஒருகாய் காய்க்குமானால் கடவுள்கள் வந்து விட்டார்கள் என்று அறிவிக்கப் படும்.

4. பெருமரத்துச்சியில் ஒளிந்துள்ள மாந்தன் ஒருவன் புது வகை ஓசைகளை எழுப்பினால் தீய வளிகள் மரத்திலுள்ளதாக அறி விக்கப்படும். துறவி வேடம் பூண்ட மன்னரின் நிகராளர்கள் தீய வளிகளை அமைதிப்படுத்த பணப் பிரிவு செய்வார்கள்.

5. கழக்கப் பாதையுள்ள கிணறு ஒன்றில் பல தலைகளுள்ள பாம்பு தோன்றுவதாக வெளிப்படுத்தபட்டு, அதை வந்துகாண மக்கள் அழைக்கப்படுவார்கள். அவர்களிடமிருந்தும் பணம் பிரிவு செய்யப்படும்.

6. கோவிலுக்குள் அல்லது ஒரு உருவச்சிலைக்குள் மருந்தினால் உணர்ச்சியற்றதாக்கப்பட்ட ஒரு நலபாம்பு ஒளித்து வைக்கப்படும். இப்பேர்ப்பட்ட தந்திரங்களால் ஏமாறுத மக்களை வழிக்குக் கொண்டு வர திருநீர்ப் படையலில் அல்லது கோயில் சோற்றில் சிறிது மயக்கப் பொருள் சேர்த்துக் கொடுக்கப்படும். தொடர் புடையவர்கள் மயக்க நிலையெய்தியதும் அவர்களிடம் கடவுள் சீற்றத்திலிருக்கிறாரெனக் கூறி, பணம் பறிக்கப் பெற்றது.

7. தீண்டப்படக் கூடாத மாந்தன் ஒருவனை நல்ல பாம்பினால் கடிக்கச் செய்து தீய வளிகள் வந்துள்ளன என்று அறிவிக்கப்படும். காரியங்கள் நடத்துவதற்குப் பணம் பறிக்கப்படும்.

கோவில் இயக்கம் பிராமணர்களுக்குப் பெரு வெற்றியாக அமைந்தது. பணத்தையும், வருவாயையும், மதிப்பையும் அதிகாரத் தையும் அது அவர்களுக்கு அளித்தது. அரசர்களும், பணக்காரர் களும், பொதுமக்களும் கோவில்களுக்குத் தாராளமாக வழங்கினர். வணங்குபவரைக் கவருவதற்காக எல்லாவகையான மூடநம்பிக்கை களும் விளம்பரப் படுத்தப்பட்டன. O

நீங்கள் செ.சொ.பி திட்டத்தில் பெருமைமிகும் உறுப் பினரா? இல்லெனில் தொடர்புகொள்க.

—அமைச்சர், தென்மொழி

தாழ்ந்த வெப்பநிலைகள்.

த. சலாவுத்தீன். அறி. இ, ஆ. ப.

நம் நாட்டில் குளிர்காலங்களில் வெப்ப நிலை மிகக் குறைவாக இருக்கின்றது. ஆனால் நிலமுனைகளில் எப்பொழுதும் வெப்பம் மிகக் குறைந்து (40 பாகை) இருக்கும். இயற்கையில் வெப்பநிலை தானாகவே குறைவதையும் உயருவதையும் நாம் உணருகின்றோம். பல அறிவியல் அறிஞர்கள் மிகக் குறைந்த வெப்ப நிலைகளை ஆய்வுச்சாலைகளில் உண்டாக்கியுள்ளனர். இதை நான் கூறினால், வெப்ப நிலையை அதிகமாகக் குறைப்பதில் வெற்றி கண்டால் நமக்கென்ன என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் இந்த வெப்பநிலைக் குறைத்தல் அளவீட்டியல் அறிஞர்களுக்கு அதிகம் பயன்படுகின்றது. இந்த வெப்பநிலை மாறுபட்டால் நம்மைச் சுற்றியுள்ள உலகில் என்னென்ன மாற்றங்கள் நிகழ்கின்றன, இதனால் நாம் எவ்வாறு தாக்கப்படுகிறோம், நமக்குத் தாழ்ந்த வெப்ப நிலையினால் என்ன பயன் உண்டு என்பவற்றைக் கூறினால் உண்மையில் நீங்கள் வியப்படைவீர்கள். இயற்கையின் வினைகளைச் சீராக ஆய்வதால் நமக்கு எப்பொழுதும் பயன் கிட்டும். மாந்தன் ஆராய்ச்சிகள் செய்து அதன் பயனால் பல பொருள்களை உண்டாக்கி யுள்ளான். அவை நமக்குப் பல வகையில் பயன்பட்டு வருகின்றன. அறிவியல் ஆராய்ச்சியில் கிடைக்கும் பொருள்கள் தாமே நம்மை கெடுப்பவையோ நமக்கு நல்லது செய்பவையோ அல்ல. அவற்றை மாந்தன் பயன்படுத்தும் முறையில் அவை நல்லவையாகவும் தீயவையாகவும் மாறிவிடுகின்றன. எடுத்துக் காட்டாக அணு ஆற்றலினைக் கொண்டு குண்டுகள் செய்து மாந்தர்களை அழிக்கலாம். அதே ஆற்றலினைக் கொண்டு அணு எரிபொருள்கள், வேளாண்மைக்குப் பயன்படும் புதுவகை எருக்கள் முதலிய பல பயன்படும் முறைகளிலும் பயன்படுத்தலாம். இக்கட்டுரையில் அவை நமக்கு எவ்வாறு பயன்படும், எவ்வாறெல்லாம் பயன் படுத்தலாம் என்பவற்றை விளக்கமாகக் கூறுகின்றேன்.

கதிரவனின் மேற்பரப்பில் வெப்பநிலை 6000 பாகைஆகும். இந்த வெப்பநிலையை அது விண்வெளியில் வீசுகின்றது. ஆனால் இவ் வெப்ப நிலை வெளியேறக் கரணியம், கதிரவனின் உள்நடுவே ஏற்படும் உட்கரு வினைகளே (Nuclear reactions). அங்கே வெப்ப நிலை ஏறத்தாழ 400 கோடி மடங்கு ஆகும் என்று எண்ணப்படுகின்றது. இந்த வெப்பநிலை நாம் வாழும் வெப்ப நிலையைவிட நூறாயிரம் மடங்கு அதிகமானதாகும். இதேபோல் நூறாயிரம்

மடங்கு குறைந்த வெப்ப நிலைகளினால் நமக்கு என்ன பயன்? அந் நிலைகளில் பொருள்களின் இயைபுப் பண்புகள் எவ்வாறு மாறும் என்பதனை நாம் அறிய வேண்டும்.

வெப்பம்-அசைவு-அணு ஒழுங்கின்மை.
(Heat, Motion, and Atomic Disorder)

வெப்பம் என்றால் என்ன என்பது நமக்கு எளிதில் விளங்காத தொன்றில்லை. நம் உடல் வெப்பம் குளிர்ச்சி போன்ற உணர்ச்சிகளை எளிதில் அறிந்து கொள்ளும். உடல் அதிக வெப்பமாக இருக்கின்றது என்றால் உடலில் சுரம் இருக்கின்றது என்பதை எளிதாக அறிந்து கொள்ளலாம். பொருள்கள் குளிர்ச்சியாகவோ அல்லது வெப்பமாகவோ இருக்கின்றன என்றால் இயல்பாக நாம் கவலைப் படுவதில்லை. அறிவியல் கண்ணோட்டத்தில் இது பெரிய இன்றியமை யாமை வாய்ந்ததாகும். இந்த வெப்பநிலையை அளக்க ஒரு அலகு தேவைப்பட்டது. இதைக் கொண்டுதான் ஒரு பொருள் எவ்வளவு குளிர்ச்சியாக அல்லது வெப்பமாக இருக்கின்றது என்பதை அறிய லாம். வெப்பப்படுத்துவதால் பொருள்களில் ஏற்படும் மாறுதல்கள் நீண்ட ஆய்வுகளுக்குப்பின் அறியப்பட்டுள்ளன.

ஒரு பொருளை வெப்பப்படுத்தினால் அதிலுள்ள அணுக்கள் அதிரத் துவங்குகின்றன. அதாவது அணுக்களுக்கு அதிக ஆற்றல் கிடைக்கின்றது. (எல்லாப்பொருள்களும் அணுக்களால் ஆனவை). நம் நிலையும் இதேதான். வெப்பம் அதிகமானால் நம்மால் அதைப் பொறுத்துக் கொண்டு அமைதியாக இருக்க முடியாது. பொருள் களின் குளிர்ச்சி அல்லது வெப்ப அதிகரிப்பு ஆகியவற்றை ஆராயும் இயல் உண்மையில் அணுக்கள் மூலக்கூறுகள் இவற்றின் ஆற்றலைப் பற்றியதே யாகும்.

மிகக் குளிர்ச்சியான நாள்களில் பனிக்கட்டித்துண்டு ஒன்றைப் புதிர்க்கதிர்கள் மூலம் ஆராய்ந்தோமானால் அதிலுள்ள நீர் மூலக் கூறுகள் ஒழுங்காகப் பின்னப்பட்ட தட்டியின் அமைப்பைப் போல் அமைந்திருப்பதைக் காணலாம். இவ்வமைப்பைப் **பின்னல் அமைப்பு** (Laltice) என்கிறோம். இந்த ஒழுங்கான அமைப்புதான் பொருள்களுக்குப் படிவ அமைப்பைத் தருகின்றது. மேனாடுகளில் குளிர்காலங்களில் அழகான அமைப்புள்ள பனிக்கட்டி வடிவங்கள் உண்டாவதற்கு இதுதான் காரணியம். மிகக் குளிர்ந்த நாள்களில் கூட மூலக் கூறுகள் அசைந்து கொண்டுதான் இருக்கும். இதைத்

தனி நுண்பெருக்காடி மூலம் காணலாம். இவ்வசைவிற்குச் 'சமநிலையில் அதிர்தல்' என்று பெயர். இப்பொழுது இப்பனிக்கட்டியின் வெப்ப நிலையை மெதுவாக உயர்த்திக் கொண்டே போனால், மூலக் கூறுகள் அசையத் தொடங்குகின்றன. வெப்பம் அதிகமாக அதிகமாக அசைவு அதிகமாகின்றது. ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலையில் மூலக் கூறுகள் இடம் மாறுகின்றன. உடனே பனிக்கட்டி நீராக மாறுகின்றது. இதற்குக் கரணியம் வெப்பமே!

இந்நீரை இன்னும் வெப்பப் படுத்தினால் மூலக்கூறுகளின் அசைவு இன்னும் அதிகமாகின்றது. அறிவியல் முறையில் கூறினால் 'நீரின்பாகு நிலை' (Viscosity) குறைகின்றது. (இந்நிலையைப் பிசுபிசுப்பாக இருக்கும் எண்ணெய்யை வெப்பப்படுத்தினால் நன்றாகக் காணலாம்). வெப்பநிலை 100 பாகை ஆனதும் மூலக்கூறுகள் தனித்தனியாகப் பிரிந்து, பறந்து விடுகின்றன. இதற்கு வளியாதல் அல்லது நீர்வளியுண்டாதல் என்று பெயர்.

மேற்கண்ட நிகழ்ச்சிக்கு ஒருசிறிய எடுத்துக்காட்டால் விளக்கம் பெறலாம். ஒரு வகுப்பறையில் மாணவர்கள் அனைவரும் ஒழுங்காக இருக்கையில் அமர்ந்திருக்கின்றனர். ஏனெனில் வகுப்பில் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருக்கின்றார். பாடம் முடிந்ததும் ஆசிரியர் தம் இருக்கையில் அமருகின்றார். மாணவர்கள் தங்கள் இருக்கை-களில் இருந்து கொண்டே அங்குமிங்கும் திரும்பிப் பேசத் தொடங்கு கின்றனர். ஆசிரியர் வகுப்பறையை விட்டு வெளியே சென்றதும் மாணவர்கள் தங்கள் இருப்பிடத்தைவிட்டு இங்கும் அங்கும் சென்று குதிக்கின்றனர். இந்நிலையைப் 'படிகநிலை' உருகிப் 'பாய்மநிலைக்கு' வந்ததாக எடுத்துக்கொள்ளலாம். சில மணித்துளிகளுக்குப்பின், ஆசிரியர் வரமாட்டார் என்று தெரிந்ததும் மாணவர்கள் வகுப்பறை யிலிருந்து வெளியேறுகின்றனர். சிலர் பலகணி வழியே குதித்து விளையாட்டுத்திடல் போவதையும் காணலாம். பாய்ம நிலையிலிருந்து மாணவர்கள் 'வளி' நிலைக்குச்சென்று விடுகின்றனர். மீண்டும் வகுப் பறைக்கு வருவதில்லை (அடுத்தநாள் வரை). நான் கூற வந்த செய்தி ஆசிரியர் இல்லையென்றதும் ஒழுங்கின்மை அதிகரித்துவிட்டது என்பதேயாகும். இதே நிலைதான் பனிக்கட்டியை வெப்பப்படுத்தும் போதும் உண்டாகிறது. அதாவது பொருள்களின் வெப்பம் அதிக மாக அதிகமாக அணு ஒழுங்கின்மை அதிகரிக்கின்றது. குளிர்ச்சி எவ் வாறு அணுக்களில் ஒழுங்கினை நிலைப்படுத்துகின்றதோ அதே போல்

மாணவர்களின் ஒழுங்கின்மையை ஆசிரியர் சரிப்படுத்துகின்றார். ஆகையால் ஆசிரியரைத் 'தாழ்ந்த வெப்பஇயல் வல்லுநர்' (Low Temperature Physicist) எனலாம்.

அடுத்து இன்னொரு எடுத்துக் காட்டைப் பார்க்கலாம். ஒரு மின் கலத்துடன் செப்புக்கம்பியை இணைத்தால், கம்பியில் மின்சாரம் பாய்கின்றது. சில மணி நேரங்களுக்குப்பின் மின்கலம் சோர்வடைந்து விடுகின்றது. ஒரு கடத்தியில் (மின்சாரம் பாயக்கூடிய கம்பியைக் கடத்தி என்கிறோம்.) மின்சாரம் பாயவேண்டுமானால் அந்த மாழையின் அணுக்கள் ஒழுங்காக அமைந்து அசைவிற்காக ஒவ்வொரு அணுவும் மின்னங்களைக் (Electrons) கொடுக்க வேண்டும். இப்படிப் பட்ட மாழையில் மின்சாரத்தைச் செலுத்தினால் மின்னங்கள் முன்னேறுகின்றன. மின் அழுத்தம் அதிகம் ஆக ஆக மின்னங்கள் வேகமாக முன்னேறுகின்றன. மின்னங்கள் முன்னேறும் போது ஒரு சிறப்பான நிகழ்ச்சி நடைபெறுகின்றது. மின்னங்கள் அணுக்களின் ஊடே செல்லுவது கடினமாகின்றது. அவை அணுக்களின் மீது மோதுகின்றன. இவ்வாறு மோதுவதால் ஒரு குறிப்பிட்ட மின் அழுத்தத்தில் செல்லும் மின்சாரத்தின் அளவு முடிவு செய்யப் படுகின்றது. இவ்வாறு உண்டாகும் தடையை மின் தடை என்கிறோம். மின் அழுத்தம், மின் தடை, பாயும் மின்சாரம் ஆகியவற்றின் தொடர்பை விளக்க ஓம் என்பவர் ஒருமுறையை வரையறுத்துள்ளார்.

மின்சாரம் பாயும் காலம் அதிகமாகும்போது அணுக்களின் அதிர்வு அதிகமாகின்றது. அப்போது மின்னங்களின் மோதுதல் அதிகமாகின்றது. அணுக்கள் அதிகமாக அதிருவதற்குக் கரணியம் கடத்தி வெப்பமாவதாகும். மின்னாற்றல் மின் தடையால் வெப்ப ஆற்றலாக மாறுகின்றது. அதாவது கடத்தி வெப்பமாகுமானால் மின் தடை அதிகமாகும். கடத்தி குளிர்ச்சியாகுமானால் மின்தடை குறையும்.

அறை வெப்பநிலையில் நல்ல செப்புக்கம்பியின் மின்தடை 1 ஓம் ஆகும். அதை 600 பாகைக்கு வெப்பப்படுத்தினால் அதன் மின்தடை 3 ஓமாக அதிகரிக்கின்றது. இப்பொழுது 1 'ஆம் பியர்' மின்சாரத்தைப் பாய்ச்ச 3 மின்னி அழுத்தமுள்ள மின்கலம் தேவைப்படுகின்றது. ஏனென்றால் வெப்பம் அதிகமாவதால் அணு அதிர்வு அதிகமாகின்றது. இவ்வதிர்வை எதிர்த்துப் பாய் அதிக அழுத்தம் தேவைப் படுகின்றது. மாறாக இக்கம்பியை ஏறத்தாழ-190பாகை இல் இருக்கும்

பாய்மக் காற்றில் (Liquid air) குளிர்ச்சி செய்தோமானால் மின் தடை $\frac{1}{5}$ ஓமாகக் குறைகின்றது. ஒரு மின்னி மின்கலத்தைக் கொண்டு 5 'ஆம்பியர்' மின்சாரத்தைப் பாய்ச்சலாம். குளிர்ச்சி அதிகமாவதால் மாழையிலுள்ள அணுக்களின் அதிர்வு குறைகின்றது. அடுத்துப் பாய்மம் எல்லியனில் கம்பியை மூழ்கும்படி செய்தால் (Liquid Helium) மின் தடை $\frac{1}{1000}$ ஓமாகக் குறைகின்றது. 1 'ஆம்பியர்' மின்சாரம் பாய $\frac{1}{1000}$ 'மின்னி' போதும். (எல்லியன் பாய்மம் (Liquid Helium) அறை வெப்ப நிலையைவிட 100 மடங்கு குறைவான வெப்ப நிலை உடையது). அணுக்களின் அதிர்வு மிகக் குறைவதால் மின்னங்களைத் தடை செய்ய அவற்றால் முடிவதில்லை. ஆகத் தாழ்ந்த வெப்ப நிலைகளில் பொருள்களின் அணுக்கள் ஒழுங்காக அமைகின்றன. ஆகையால் தாழ்ந்தவெப்ப நிலை அளவையியல் (Low Temperature Physics) மூலம் பொருள்களின் அமைப்பை நன்றாக அறியலாம்.

வேகமாகக் காற்று அடிக்கும்போது ஒரு மரத்திலுள்ள இலைகளை மலர்களை, கனிகளைத் தனித்தனியே அறிவது கடினமாகின்றது. தொலை நோக்கியைக் கொண்டு பார்த்தாலும் அறிவது கடினம்தான். மாறாக அசைவு குறைவான நேரத்தில் மரத்திலுள்ள இலைகள், மலர்கள், கனிகள் அகியவற்றின் அமைப்பை நன்கு அறியலாம். கனிகளைக் கூட எண்ணிவிடலாம். தொலை நோக்கியைக் கொண்டு பார்த்தால் இலையின் நரம்புகளின் அமைப்பைக்கூட அறிந்து கொள்ளலாம். இதே போல் தாழ்ந்த வெப்ப நிலையில் அணு ஒழுங்கு அதிகரிக்கின்றது. ஆகையால் பொருள்களின் உள்ளமைப்பை அறிய ஏதுவாகின்றது. அணுக்களின் ஒழுங்கின்மையைக் கேசியசு என்பவர் "என்டுரோபி" (Entropy) என்று பெயரிட்டார்.

கெல்வினின் தனி வெப்பநிலை அளவை.

அதிக வெப்பநிலை என்றால் அணு ஒழுங்கின்மை அதிகம் என்றும், வெப்பநிலை குறைவென்றால் அணு ஒழுங்காக இருக்கின்றது என்றும் தெரிந்து கொண்டோம். பொருள்களின் வெப்ப நிலையையும் குளிர்ச்சி நிலையையும் எவ்வாறு தெரிந்து கொள்கின்றோம்? எந்த வெப்ப நிலையில் அணு ஒழுங்கு உச்சநிலையிலும், எந்த வெப்ப நிலையில் அணு ஒழுங்கின்மை உச்ச நிலையிலும் இருக்

கின்றது? இதைத் தெரிந்துகொள்ளத் தனி அளவை தேவைப் படுகின்றது. கெல்வின் என்ற அறிவியலார் இதற்காகத் "தனி வெப்பநிலை அளவை"யை (Absolue Temperature) ஆக்கினார். இந்த அளவையில் மிகுவெப்பநிலை 'தனிச்சுழி' (Absolute Lon) ஆகும். உச்சநிலைக்கு எல்லையே இல்லை. தனிச்சுழி—273.15பாகைக்குச் சமம். இதை 0^0கெ(0^0கெல்வின்)என்கிறோம். இந்த அளவின்படி நீரின் உறை நிலை $+273{\cdot}15^0$கெ (0 பாகை) நீரின் கொதிநிலை $+373{\cdot}15^0$கெ (100பாகை) ஆகும். காற்று 80^0கெ'யில் (ஏறத்தாழ-190பாகை) பாய்ம மாகின்றது. நீரியம் (Hydrogen) ஏறத்தாழ 20^0கெ'யிலும், எல்லியன் (Helium) 4^0கெ'யிலும் பாய்மமாகின்றன. வழக்கமாக அறையின் வெப்பநிலை 20இலிருந்து 25பாகை, அதாவது ஏறத்தாழ 300^0கெ $(273+25=298)$ காற்றுப் பாய்மம் நம் உலகத்தைவிட 4 மடங்கு குளிர்ச்சியாக இருக்கின்றது. எல்லியின் பாய்மம் நம் உலகை விட 100 மடங்கு குளிர்ச்சியாக இருக்கின்றது.

தங்சுடன் கம்பி வெண்மை நிலைக்கு வெப்பப் படுத்தப்பட்டால் (மின் விளக்கு எரியும் போது) அதன் வெப்பநிலை 3000^0கெ நம் உலகைவிட 10 மடங்கு வெப்பமுடையது. கதிரவனின் மேற்பரப்பில் வெப்பநிலை 6000^0கெ. இது நம் உலகைவிட 20 மடங்கு அதிகமான வெப்ப முடையது. கதிரவனின் நடுவில் வெப்பநிலை 400இலக்கம் கெல்வின் ஆகும். 100,000 மடங்கு நம் உலகைவிட வெப்பமுடையது. வெப்பத்தைப் பற்றி மட்டும் கூறிக் கொண்டு வந்தோம். எவ்வளவு குளிர்ச்சியை உண்டாக்க முடியும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? ஆய்வுச்சாலையில் பலகருவிகள் கொண்டு கிடைக்கப் பெறும் மிகக் குறைந்த வெப்பநிலை $\cdot0003^0$கெ பாய்மக் காற்றில் ஒரு மலரைத் தோய்த்து எடுத்துப் போட்டால் அதுக் கண்ணாடித் துண்டுகளைப் போல் நொறுங்கிச் சிதறுகின்றது சைமன், குவியோர்த்தி ஆகியவர்கள்$\cdot00000i^0$கெ வெப்பநிலை உண்டாக்கினர். இவ்வெப்ப நிலையை அந்தத் துணைக் கருவிகள் 10இலிருந்து 20 நொடிகளே தாங்கின. அதாவது இந்த வெப்பநிலை 390 இலக்கம் மடங்கு நம் உலகின் வெப்பநிலையைவிடக் குறைந்ததாகும். இதுவரை கூறப்பட்ட எடுத்துக்காட்டுகள் விளக்கத்திற்காகக் கூறப்பட்டன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இயலபாகத் 'தனிச்சுழி' (273பாகை) வெப்பநிலையை உண்டாக்குவது மிகக் கடினமாகும். வெ$=0$கெ வெப்பநிலை உண்டாக்க முடியாது. ஆனால் அதன் அருகே எவ்வளவு செல்ல முடியுமோ அவ்வளவு செல்லலாம். (தொடரும்)

மொழிகாக்கக் கிளர்ந்தெழுக!

மறைத்திரு. சா. இலாரன்சு அடிகள்.

மொழியைத் தன் விழியென எண்ணிக் காப்பது தமிழினம். தமிழனுக்குத் தன்மொழி, பேசும் கருவிமட்டு மன்று; அதுவே அவனது உயிர்ப்பு. பன்னெடுங்காலமாகத் தமிழனோடு அவனது மொழி இரண்டறக் கலந்து நிற்பது. உலகில் வேறு எம்மொழியும் இச்சிறப்பு பெற்றதில்லை.

புறப்பொருள் வெண்பாமாலை நூலில் ஐயனரிதனர் தமிழ்க் குடியின் தொன்மையைக்

" கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முற்றோன்றி மூத்தகுடி" (பா. எண் 35)

என்று இவ்வுலகின்கண் வேறு இனமக்கள் தோன்றும் முன்னரே தமிழர் தோன்றி, வெட்டுக் கருவிகளை ஆக்கவும், பயன்படுத்தவும் முற்பட்டனர் என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

தமிழ்மொழி, வரலாற்றுக்கு முற்பட்ட பன்னெடுங்காலத்திற்கு முன்னமே வளம் பெற்றுக் கழகங்கள் கண்டு சிறப்படைந்தது. குமரி நாட்டுத் தொன்மதுரையில் கி.மு. 10000 ஆண்டுகட்கு முன்னரே தலைக்கழகம் விளங்கியது. அக்காலத்தே உலகில் வேறு யாண்டும் எம்மொழியும் பாவியம் உடைய மொழியாக இல்லை.

வளமுடன் வளர்ந்த தமிழ், இடையிடையே நிகழ்ந்த கடற் கோளினால், ஒப்பரிய பல நூல்களையும், வரலாறு படைத்த நிலப் பகுதிகளையும் இழந்தது. இவற்றைக் கழகக் காலச் செய்யுட்களால் உணரலாம். கிடைத்துள்ள தொன்னூல் தொல்காப்பியம் ஒன்றே. இந்நூலின் காலம் இற்றைக்கு ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் என்பது தவத்திரு மறைமலையடிகளாரின் கருத்து. தமிழில் உள்ள பழம் பெரும் இலக்கணமிது. "இலக்கியங் கண்டதற் இலக்கணமியம்பலின்" என்ற பவணந்தியின் கருத்துக் கிசைய இவ்விலக்கண நூலுக்கு முன்னரே பற்பல இலக்கியங்கள் தமிழில் இருந்தன என்பது துணிபு. தொன்மையான இம்மொழி ஆரியராலும், சமண, பவுத்தராலும் பாழ்படுத்தப்பட்டது. அவர் தமிழ் மொழியையும், தத்தம் சமயத்தையும் இணைத்து, தமிழின் தனித் தன்மையைப் பாழ் செய்தனர்.

மாமன்னன் அசோகன் காலத்திலும் தமிழகம் தன்னாட்சி பெற்றே இலங்கியது. பண்டு தமிழக வேந்தர்களே வடபுலம் சென்று ஆரிய மன்னர்களை வென்று பனிமலை கொண்டனர். இன்றளவும் பனிமலையத் தொடரில் (திபேத்பகுதியில்) சோழமலைத்தொடர் (Chola Range), சோழக் கணவாய் (Chola pass) எனும் பெயர்கள் நிலவி வருவது இதற்குச் சான்றாகும். அறத்திலும், மறத்திலும் பண்பாட்டிலும், இலக்கியத்திலும், வரலாற்றிலும் எழுச்சி பெற்ற

தமிழினத்தை வரலாறு இல்லாத ஆரியர்கள், அவர்களது மொழி யுணர்வை மழுங்கச் செய்து இடைக்காலத்தில் வெற்றி பெற்றனர். இனத்தால் இந்தோ–ஆரியர்களாகிய ஆங்கிலேயரும் தம் ஆட்சியில் வடமொழிக்கே ஆக்கம் தந்தனர்.

ஆங்கிலேயரின் ஆட்சியின்பொழுது பார்ப்பனர்களும், அவர் களுக்கு அடிவருடிய போலித் தமிழ் ஆராய்ச்சியாளரும் தமிழுக்குப் பல்வேறு கேடுபாடுகளைச் செய்து விட்டனர். அதுவே தமிழனின் இனவுணர்வையும், நாட்டுணர்வையும் நலியச் செய்தது. திருக் குறளின் நூலாசிரியர் வல்லபர் என்ற பார்ப்பனர் என்று கூறுமள வுக்கு அவர்கள் துணிந்தனர். லகர ளகர வேறுபாட்டால் வல்லபர் என்ற பெயரே வள்ளுவராயிற்று என்பது அவர்களது ஆராய்ச்சி! இத்தகைய கருத்தடங்கிய ஓலை ஒன்றை யாம் தஞ்சைக் கலைமகள் மாமன்ற நூலகத்தில் கண்டோம். தமிழனுக்குத் தமிழ் உணர்ச்சி மழுங்கடிக்கப்பட்டதால் ஏற்பட்ட விளைவு இது. "பார்ப்பனர் தமிழுக்கு என்னகேடு செய்து விட்டனர்?" என்று கேட்போருக்கு இச் செய்தி யினை முன் வைக்கிறோம்.

இன்றளவும் பார்ப்பனர் தம்மால் இயன்றவரை பற்பல துறை களில் தமிழுக்கு, எழுத்தாலும், பேச்சாலும் கேடு செய்தே வருகின்ற னர். பாவியங்களில் இடைச் செருகல் செய்தும், தனித்தமிழ்ச் சொற்களைக் களைந்து வடசொற்களை உட்புகுத்தியும், தனித்தமிழ் இலக்கியங்களுக்கு, வடசொற்கலந்து, குலமுறை அடிப்படையில் உரை செய்தும் தமிழ் இலக்கியங்களை அழித்து வருகிறார்கள்.

தமிழகம் செய்த தவப்பயனுய் மேற்கு நாட்டினின்று இறைபணி புரிய வந்த கால்டுவெல், ஈராசு, போப்பு போன்ற அறிஞர்கள், நடு நிலை நின்று மொழிகளை ஆராய்ந்து தமிழ் மொழியின் தனித் தன்மையை–தமிழினத்தின் தொன்மையை உலகுக்கு வெளிப் படுத்தினர். அதன் பின்னர், **மறைமலையடிகளார், பாவாணர், பாவேந்தர், புலவர்குழந்தை** போன்றவர்கள் தமிழ்மொழி, தமிழ்நாடு குறித்துத் தொடர்ந்து தமிழனுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியுள்ளனர்.

தமிழ் தூய்மை பெற்றால் மட்டுமே தமிழினம் ஏற்றம் பெற விய லும். அதற்குத் தடைகள் ஏராளம்! அத்தடைகள் தகர்க்கப்படல் வேண்டும்! தமிழின் தனித்தன்மையைக் காக்கத் தன்மானத் தமிழர் முன்வர வேண்டும். "தென்மொழி இயக்கம்" தமிழினத்தின் இயக்கம். தன்மானத் தமிழக இளைஞர்கள் இவ்வியக்கத்தில் ஈடுபட வேண்டும். சமய, இன, குல வேறுபாடுகளைக் களைந்து மொழி காக்க வேண்டும். தமிழ் இயக்கமே தமிழக விடுதலைக்கு வழி வகுக்கும் என்பது எம் துணிபு.

"கெடல் எங்கே தமிழின் நலம்?
அங்கெல்லாம் தலையிட்டுக் கிளர்ச்சி செய்க!"

தமிழ்நாட்டரசுக்கும்

மாண்புமிகு முதலமைச்சர்

அருட்செல்வனார்

அவர்கட்கும்

நன்றியும் பாராட்டும்.

கழகத் தலைவர் மொழிநூன் மூதறிஞர் செந்தமிழ் ஞாயிறு திருமிகு. தேவநேயப் பாவாணர் அவர்களின் வாழ்நாட் பெரும் பணியாகிய செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம் இனிதே நிறைவேற மாட்சிசால் தமிழ்நாட்டரசு ஆவன செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தமிழினம் அனைத்துத் துறையிலும் முறையாக முன்னேற, தமிழை அயன்மொழிப் பிணிப்பினின்றும் முற்றும் விடுவித்துத் தமிழே திரவிடத்திற்குத்தாயும் ஆரியத்துக்கு மூலமும் ஆகும் என்னும் உண்மையை நிலைநாட்டுதற்குப் பேரறிஞர் பாவாணர் அவர்களின் பன்மொழிப் புலமையும் மொழிநூல் தலைமையும் பல்துறையறிவும் மிளிரும் ஒப்பற்ற இவ்வகர முதலி உருவாக்கமே அடிப்படையாகும்.

"தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம்"

என்னும் தனித்துறை அரசால் நிறுவப் பெற்றுள்ளது. மூதறிஞர் பாவாணர் அவர்கள் இயக்குநராகவும் மற்றும் நால்வர் துணைவராகவும் அமர்த்தப்பெற்றுள்ளனர். அகரமுதலி யளவு பன்னிரு மடலமென்றும், பதவிக்காலம் நாலாண்டென்றும் அறிவிக்கப் பெற்றுள்ளது.

இன்றியமையாச் சிறப்பினதான இப்பணியில் ஆர்வமும் அக்கறையுங் கொண்டு, கைகொடுத்துதவி ஆவன செய்துள்ள தமிழக அரசுக்கும் முதல்வர் திருமிகு. அருட்செல்வனார்க்கும் நெஞ்சார்ந்த பாராட்டும் நன்றியுந் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

செந்தமிழ்ச் சீர்சால் அகரமுத லிக்குதவி
தந்ததமிழ் நாட்டரசு வாழியர்-நந்தமிழைப்
போற்றும் முதல்வர் புகழ்சால் அருட்செல்வர்
ஏற்றமொடு வாழ்க இனிது!

மதுரை-1.
தி.பி.௨௲௫.விடை ௪

—இறைக்குருவன்.
(உ.த.க. பொதுச் செயலாளர்)

உ.த.க. கிளையினர் கழகத் தலைவர் பாவாணரின் வாழ்நாள் தமிழ்ப்பெரும் பணிக்குக் கைகொடுத்து நிறைவேற ஆவன செய்த தமிழ் நாட்டரசுக்கும் முதல்வர் திருமிகு. மு. அருட் செல்வனார்க்கும் பாராட்டும் நன்றியும் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்புக!

பொதுச் செயலாளர்.
(உ.த.க.)

தென்மொழியின்
புதிய தனித்தமிழ் வெளியீடுகள்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின்

புதுமுறை இலக்கியங்கள்.

1.	எண்சுவை எண்பது.	1-50
2.	பாவியக் கொத்து.	2-50
3,	ஐயை.	1-00
4.	ஐயை (ஆங்கிலப் பெயர்ப்புடன்).	[அச்சில்]
5.	கற்பனை ஊற்று-கட்டுரைகள் 1.	2-50
6.	கற்பனை ஊற்று-கட்டுரைகள் 2.	[அச்சில்]
7.	பள்ளிப் பறவைகள்-முதல்தொகுதி (குழந்தைப் பாடல்கள்)	3-50
8.	பள்ளிப் பறவைகள்-2 ஆம் தொகுதி.	[அச்சில்]
9.	மகபுகு வஞ்சி (ஆங்கிலப் பெயர்ப்புடன்).	3-50
10.	இலக்கியத்துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப் பணிகள்.	0-75
11.	புரட்சிப்பாவலர் பாரதிதாசன்.	0-50
12.	கொய்யாக்கனி(மறுபதிப்பு)	[அச்சில்]
13.	அறுபருவத் திருக் கூத்து.	[அச்சில்]
14.	கனிச்சாறு.	[அச்சில்]
15.	நூறாசிரியம்-முதல்பகுதி. (ஆங்கிலப் பெயர்ப்புடன்)	[அச்சில்]

பிற விளக்கங்கட்கு:

அமைச்சர்,
தென்மொழி, கடலூர்-1.
தமிழ்நாடு.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-607001. தமிழ்நாடு.